ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




ஞாயிறு ❖ பிப்ரவரி. 11, 2024 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 124 ❖ ரூ.10



# இன்று

11-2-24

சந்திர தரிசனம்

சுபமுகூர்த்தம்

சுக்கிரவாரப்பேட்டை பகவன்னான் கோயில் – காரியத் தடை நீங்கும்.
சக வருடம் 1945 மாகம் 22

| சோபகிருது தை 28 | FEB - SUN ஞாயிறு | ரஜப் 30 வளர்பிறை 042 / 324 | இராசிபலன் |
|---|---|---|---|

வளர். துவிதியை 46.27 (கா. 01.10) சதயம் 36.40 (மா. 09.15) சேஷம் 01.29 தியாஜ் 51.31 சித்த. சுபமுகூர்த்தம். சந்திர தரிசனம். திருவள்ளூர் ஸ்ரீவீரராகவர் தொட்டித் திருமஞ்சனம். ஸ்ரீவைகுண்டம் ஸ்ரீவைகுண்டபதி பால் அபிஷேகம். கண்ணூறு கழித்தல் நன்று. செடி கொடிகள் வைக்க நன்று.

| | நல்லநேரம் | கௌரி நல் | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 6.00-7.00 | 10.30-11.30 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை | 3.30-4.30 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்; மகர லக்கனம் இருப்பு நா. 0 வி. 22; சந்திராஷ்டமம் புனர்பூசம் பூசம்; கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.35

எறும்பு ஊர கல்லும் தேயும்

இராசிபலன்: மேஷம் - மறதி; ரிஷபம் - தடை; மிதுனம் - உயர்வு; கடகம் - மேன்மை; சிம்மம் - பக்தி; கன்னி - இன்பம்; துலாம் - ஓய்வு; விருச்சி - கஷ்டம்; தனுசு - லாபம்; மகரம் - தனம்; கும்பம் - போட்டி; மீனம் - கவனம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்







| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.5,870 | Rs. 6,340 |


# கோட்டைமேடு அரசு தொடக்கப்பள்ளியில் ஆண்டு விழா




அன்னவாசல் , பிப்.11–
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அன்னவாசல் வட்டார வள மையத்திற்கு உட்பட்ட கோட்டைமேடு அரசு தொடக்கப்பள்ளியில் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி ஆசிரியை ஜெமினிட் வரவேற்றார். பள்ளி தலைமை ஆசிரியர் ஜியோ ராஜாமணி முன்னிலை வகித்து நிகழ்வினை தொகுத்து வழங்கினர். பள்ளிக் குழந்தைகளின் நடனங்கள் பாடல்கள் என கலை நிகழ்ச்சிகள் கலை கட்டியது. நிகழ்வில் வட்டார கல்வி அலுவலர் செலின்,வட்டார வளமைய மேற்பார்வையாளர் ரோஸ்மேரி சகாயராணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர். ஆசிரியர் பயிற்றுநர் வைரமுத்து, இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி, பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் கோயல் ஜெயராமன், பள்ளி மேலாண்மை தலைவர் கோகிலா போன்றோர் வாழ்த்துரை வழங்கினர்.

வட்டார கல்வி அலுவலர் செலின் பேசுகையில், கல்வியே மிகச் சிறந்த ஆயுதம் என்றும் வெள்ளத்தே போகாதது வெந்தனலில் வேகாதது வேந்தரால் கொள்ளத்தான் முடியாதது கொடுத்தாலும் நிறைவின்றி குறையாதது கல்வி ஒன்றே ஆகும். கற்றவர்களுக்குத் தான் சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவே மாணவச் செல்வங்களே படியுங்கள் நன்றாக படியுங்கள் என்றார். விழாவில் சிறப்பு பயிற்றுநர்கள் பாஸ்கர சேதுபதி, சந்திரா, குழந்தைப் பாடகர் ராமலிங்கம், கண்ணன், சித்ரா, மற்றும் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிறைவாக வேலம்மாள் ஆசிரியர் நன்றி உரையோடு விழா இனிதே நிறைவு பெற்றது.

# அரியலூர் மாவட்டத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணி இடமாற்றம்



அரியலூர், பிப்.11–
அரியலூர் மாவட்டத்தில் வருகிற பாராளுமன்ற தேர்தல் நடைமுறையை முன்னிட்டு 10 வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர், இது பற்றி அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது,

அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டார வளர்ச்சி அலுவலராக (வஊ) பி.குருநாதன், ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலராக (வஊ) க. சந்தானம், அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என் ஆர் ஜி எஸ் 2 அலுவலராக வி. கே. கஸ்தூரி, ஆண்டிமடம் வட்டார வளர்ச்சி அலுவலராக (கிஊ) தி. குணசேகரன், அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலக கண்காணிப்பாளராக து.ஸ்ரீதேவி, தா பழூர் வட்டார வளர்ச்சி அலுவலராக (கிஊ) ஆ. பொய்யாமொழி, அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை என் ஆர் ஜி எஸ் 1 அலுவலராக விஸ்வநாதன், அரியலூர் வட்டார வளர்ச்சி அலுவலராக (கிஊ) நாராயணன், அரியலூர் மாவட்ட ஆட்சியராக வளர்ச்சி பிரிவு அலுவலக மேலாளராக அமிர்தலிங்கம், அரியலூர் மாவட்ட ஊராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலக கண்காணிப்பாளராக அகிலா, ஆகியோர் உட்பட 10 பேர் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

புதிய பணியிடங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மேற்கண்ட அனைவரும், உடனடியாக பொறுப்பேற்றுக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற உலக சாதனை ஓவியத்திருவிழா



புதுக்கோட்டை,பிப்.11–
புதுக்கோட்டை, திருக்கோகர்ணம் ஸ்ரீ வெங்கடேஸ்வராமெட்ரிக் மேல் நிலைப்பள்ளியில் ரிகாப் இந்தியா மற்றும் ஜோ ஆர்ட் அகாதெமி நடத்திய உலக சாதனை ஓவியப்போட்டி நடைபெற்றது, இதில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறுபள்ளிகளிலிருந்து 250–க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஓவியம் வரைவதற்கு 'பிளாஸ்டிக் இல்லாத இந்தியா என்ற தலைப்பு கொடுக்கப்பட்டது. எல்.கே.ஜி முதல் 12–ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 17–வயதுக்கு மேற்பட்ட பிரிவினருக்கும் ஐந்து பிரிவுகளாக போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப்போட்டிகளை பள்ளியின் முதல்வர் தங்கம்மூர்த்தி வழிகாட்டுதலின் படி ரிகாப் இந்தியா டிரஸ்ட் தலைவர் சக்திவேல், மேலாளர் நந்தினி சக்திவேல், ஜோ ஆர்ட் அகாதெமி நிறுவனர் அருள் ஜோசப் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர்.

ஓவியப் போட்டியின் நடுவர்களாக பெவிக்ரைல் ஆசிரியர்கள் ஷீலா, புவனேஸ்வரி, அருள் ஜோசப் ஆகியோர் பங்கேற்று மாணவர்களின் சிறந்த ஓவியங்களை தேர்வு செய்தனர், பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது. ஓவியப் போட்டிகளை பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல், ஓவிய ஆசிரியர் சாந்தி மற்றும் உதயகுமார் உள்ளிட்ட ஆசிரியர்கள் ஒருங்கிணைத்தனர்.

# அரியலூரில் ஜாக்டோஜியோ வேலை நிறுத்தம் தொடர்பான ஆயத்தக் கூட்டம்



அரியலூர்,பிப்.11–
அரியலூர் மாவட்ட ஜாக்டோ ஜியோ வேலை நிறுத்தம் தொடர்பான ஆயத்தக் கூட்டம் நடைபெற்றது.

பழைய ஓய்வூதிய திட்டத்தை மீட்டெடுத்தல் காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட தேர்தல் கால வாக்குறுதிகளை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி வருகிற 15 ஆம் தேதி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் நடைபெறுகிறது, அது தொடர்பான ஆயத்த கூட்டம் அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஓ.கருணாநிதி தலைமையில் நடைபெற்றது, வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்பான காரண காரியங்களை விளக்கி ஜாக்டோ ஜியோ மாநிலத் தலைவர் நம்பிராஜன் சிறப்புரையாற்றினார்.

ஜாக்டோஜியோ அமைப்பில் அரியலூர் மாவட்ட அளவில் பங்கு பெற்றுள்ள ஆசிரியர் சங்கங்கள், அரசு ஊழியர்கள், அரசுப் பணியாளர் சங்கங்கள் உள்ளிட்டவற்றின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தின் முடிவில் ஷேக் தாவுது நன்றி கூறினார்.

# "மோடி மீண்டும் பிரதமராக ஓபிஎஸ் விரும்புகிறார்" – அண்ணாமலை



சென்னை : பிப். 11–
"பிரதமரின் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார் ஓபிஎஸ். மோடி மீண்டும் பிரதமராக வரவேண்டும் என அவர் விரும்புகிறார்" என்று பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை சென்னையில் செய்தியாளர்களிடம் கூறும்போது, "மற்ற கட்சிகளின் உட்கட்சி பிரச்சினைகளில் பாஜக எப்போதும் தலையிடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். பிரதமரின் மீது மிகுந்த மரியாதை வைத்திருக்கிறார் ஓபிஎஸ். கூட்டணி தொடர்பாக முன்னாள் முதல்வர் ஓபிஎஸ் கூறுவது அவரது தனிப்பட்ட கருத்து. மோடி மீண்டும் பிரதமராக வரவேண்டும் என ஓ.பன்னீர்செல்வம் விரும்புகிறார். அதற்கு அவருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

நாளை (இன்று, பிப். 11) சென்னையில் நடைபெறவிருக்கும் 'என் மண் என் மக்கள்' யாத்திரை பொதுக்கூட்டத்தில் ஜே.பி. நட்டா பங்கேற்கிறார். சென்னையில் நாங்கள் கெட்ட பெயர் வாங்க விரும்பவில்லை. 'என் மண் என் மக்கள்' நடைப்பயணத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கிறோம். சென்னை வரும் பாஜக தலைவர் ஜே.பி.நட்டா தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்படும்.

எல். முருகன் நாடாளுமன்றத்தில் பதில் கூறும்போது, அதை ஏற்பதும் ஏற்காததும் டி.ஆர்.பாலுவின் விருப்பம். டி.ஆர்.பாலு தலைமைச் செயலாளரை பார்த்துவிட்டு வெளியே வந்து "நாங்கள் என்ன தீண்டதகாதவர்களா" என்ற வார்த்தையை பயன்படுத்துகிறார். அண்ணன் டி.ஆர்.பாலு பேசிய விஷயம், அவருடைய உடல் மொழி, அதாவது எல்.முருகனைப் பார்த்து, இந்த அரங்கத்தில் இருப்பதற்கே உனக்கு தகுதி இல்லை என்று கூறுகிறார். அவர் "அன்ஃபிட்" என்று கூறினால் நாங்கள் அதை எந்தக் கோணத்தில் எடுத்துக் கொள்வது? அப்போது சமூக நீதி இல்லையா? முருகனிடம் காழ்ப்புணர்ச்சியோடு டி.ஆர். பாலுநடந்துகொண்டதுசரியா?" என்றார் அண்ணாமலை.

# சங்கரன்கோவிலில் கலைஞர் மகளிர் உரிமை திட்ட சிறப்பு முகாம் – எம்எல்ஏ ராஜா பங்கேற்பு




சங்கரன்கோவில்,பிப்.11–
கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தின் கீழ் ரூபாய் 1000 பெறாதவர்கள் மற்றும் புதிதாக பதிவு செய்பவர்களுக்கான சிறப்பு முகாம் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது.

இதில் சங்கரன்கோவில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக் கொண்டார், அதனை தொடர்ந்து கூறிய ராஜா எம்எல்ஏ, இந்த மனுக்கள் அனைத்தும் தரம் பிரிக்கப்பட்டு உரிய அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு , பதிவு செய்யபட்டு அதனை அதிகாரிகள் ஆய்வு செய்து இதில் விடுபட்ட தகுதியுள்ள அனைவருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை கிடைக்க வழிவகை செய்யப்படும் என கூறினார்.

இந்த முகாமில் பெண்கள் ஆண்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினர். இதில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கர பாண்டியன், ஒன்றியச் செயலாளர்கள் ராமச்சந்திரன், மதி மாரிமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், இந்த முகாமில் பொது மக்களின் வசதியை முன்னிட்டு ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக டேபிள்கள் அமைக்கப்பட்டு அதற்காக தனியாக ஆட்களை நியமித்து மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது.

# காலமானார்



புதுக்கோட்டை பெரியார் நகர் வைரம் ஸ்கூல் எதிரில் பிளாட்டியன் 679 ல் வசித்து வந்த புதுக்கோட்டை மாவட்ட மின்வாரியத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஏடிஓ குணசேகரன் உடல் நலக்குறைவால் காலமானார். அவரது இறுதி ஊர்வலம் நல்லடக்கம் பிப்ரவரி 11ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமையான இன்று பெரியார் நகர் இல்லத்தில் இருந்து நடைபெற உள்ளது.

புதுக்கோட்டை டவுன் வைரம் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு எதிரில் வசித்து வந்த காலம் சென்ற நடராஜர் பிள்ளை மகனும் லண்டனில் வசித்து வரக்கூடிய ராஜலிங்கம் அவர்களின் தந்தையுமான குணசேகரன் வெள்ளிக்கிழமை மதியம் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அவரது வீட்டில் காலமானார். இந்த செய்தி அவரது உறவினர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்திருக்கின்றது. மறைந்த குணசேகரன் அவர்களின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம் இன்று [ஞாயிற்றுக்கிழமை] காலை 6 மணியளவில் நடைபெறும் என்று அவரது குடும்பத்தார்கள் தெரிவித்துள்ளனர்.

# தொழிற் பயிற்சி பெறும் பிளஸ் 2 மாணவர்களுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகை : பள்ளிக்கல்வித் துறை அறிவிப்பு



சென்னை : பிப். 11–
தொழிற் பயிற்சி பெறும் பிளஸ் 2 மாணவர்களுக்கு ரூ.1,000 ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று பள்ளிக்கல்வித் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநிலத் திட்ட இயக்குநரகம் சார்பில் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கை: அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி பாடப்பிரிவில் பயிலும் பிளஸ் 2 மாணவர்களுக்கு 10 நாட்கள் அகப்பயிற்சி (இன்டர்ன்ஷிப்) வழங்கப்பட உள்ளது. இந்த பயிற்சிகளை நிறைவு செய்யும் ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.1,000 ஊக்கத் தொகை அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, அகப்பயிற்சி மேற்கொள்ளும் பிளஸ் 2 மாணவர்களின் வங்கிக் கணக்கு விவரங்களை பள்ளி தலைமையாசிரியர்கள் பெற வேண்டும். மாணவர்களின் வங்கிக் கணக்கு விவரம் மற்றும் அகப்பயிற்சிக்கு சென்ற தொழிற் நிறுவனங்கள் வழங்கிய சான்றிதழ்கள் உட்பட விவரங்களை www.tnemis.tn.schools.gov.in இணையதளத்தில் பள்ளிகள் பதிவேற்றம் செய்ய வேண்டும். அந்த விவரங்கள வட்டார வளமைய மேற்பார்வையாளர்களால் சரிபார்க்கப்பட்டு, அதன்பின் நிதியானது விடுவிக்கப்படும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# அரியலூரில் ரூ.6.79 கோடி மதிப்பீட்டில் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்



அரியலூர்,பிப்.11–
செந்துறை பகுதியில் ரூ. 6.79 கோடி மதிப்பில் புதிய வளர்ச்சி திட்ட பணிகளை போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், செந்துறை ஒன்றியத்தில்,ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் ரூ.6.79 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் துவக்கி வைத்தார், இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா முன்னிலையில் நடைபெற்றது.

அதன்படி வஞ்சினாபுரம், ஆதிதிராவிடர் பகுதியில், பிரதம மந்திரி முன்னோடி கிராம திட்டத்தின் கீழ் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மற்றும் கல்வெட் அமைத்தல் பணியினையும், தொடர்ந்து நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.234.45 இலட்சம் மதிப்பீட்டில் வஞ்சினபுரம் முதல் நக்கம்பாடி சாலை வழியாக குழுமூர் ஓடையின் குறுக்கே பாலம் கட்டும் பணியினையும் துவக்கி வைத்தார். நல்லநாயகபுரம் கிராமத்தில் அங்கன்வாடி மைய கட்டிட திறப்பு விழா, மணப்பத்தூர் ஊராட்சி படைவெட்டிகுடிக்காடு கிராமத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகள் தொடக்க விழா, சன்னாசி நல்லூர் கிராமத்தில் தானிய சேமிப்பு கிடங்கு திறப்பு விழா தளவாய் அரசு பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்கும் விழா உட்பட பல்வேறு வளர்ச்சி பணிகளை தொடங்கி வைத்தார், இந்நிலையில் அரியலூரில் குழுமூர் வழியாக சென்னை செல்லும் அரசு பேருந்து போக்குவரத்தை குழுமூரில் தொடங்கி வைத்த அமைச்சர் சிவசங்கர் குழுமூர் அங்கனூர் உள்பட பல்வேறு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு தமது சொந்த செலவில் தயாரிக்கப்பட்ட இலவச வினா விடை கையேடுகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் கங்காதாரணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் பரிமளம், மாவட்ட கல்வி அலுவலர் ஜெயா வட்டாட்சியர் வேலுமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பிரபாகரன், ஜாகிர்உசைன், பள்ளித்துணை ஆய்வாளர் .பழனிசாமி, ஊராட்சிமன்றத் தலைவர்கள், அரசுப்பள்ளி தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மாணவ, மாணவிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



▶ சென்னை எழும்பூர் அருகே தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பாக வழிபாட்டு தலங்களை பாதுகாக்க வலியுறுத்தி மாபெரும் அமைதி பேரணி நடைபெற்றது. இதில் சிறியர்வாகள், பெரியவர்கள், பெண்கள், குழந்தைகள் என சுமார் 500 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் குழந்தைகள் மத நல்லிணக்கத்தை காத்திடு, நீதி துறையே வழிபாட்டு தலங்களை பாதுகாப்பை உறுதி செய் போன்ற வாசகங்களை எந்தி சென்றனர்.




▶ புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் மதர்தெரசா பாலிடெக்னிக் கல்லூரியின் பட்டமளிப்பு விழா நிறுவனர் இரா.சின்னத்தம்பி தலைமையில் நேற்று நடைபெற்றது. தாளாளர் இரா.சி.உதயகுமார் முன்னிலை வகித்தார். பட்டிமன்ற நடுவர் கலைமாமணி கு.ஞானசம்பந்தன் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார். நிகழ்வில் கல்லூரியின் இயக்குனர் பூங்குன்றன் மற்றும் ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

“சட்டப்பிரிவு 370 ரத்துக்காக மக்கள் ஆசியுடன் பாஜகவுக்கு 370 ‘சீட்’ கிட்டும்”

# நம்பிக்கை

## காங்கிரஸும் பிற எதிர்க்கட்சிகளும் மீண்டும் எதிர்க்கட்சி வரிசையில் தான் உட்காரப் போகிறது என்பதை உணர வேண்டும்; அமித் ஷா



புதுடெல்லி , பிப். 11-

"வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக 370 இடங்களும், தேசிய ஜனநாயக கூட்டணி 400 இடங்களும் பெற்று நரேந்திர மோடி தலைமையில் மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும்" என்று உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று தெரிவித்தார். மேலும், “இந்த மக்களவைத் தேர்தல் முடிவுகளில் எந்த ரகசியமும் இல்லை. காங்கிரஸும் பிற எதிர்க்கட்சிகளும் மீண்டும் எதிர்க்கட்சி வரிசையில் தான் உட்காரப் போகிறது என்பதை உணர வேண்டும்” என்று அவர் கூறினார்.

இடி நவ் சர்வதேச வணிக மாநாடு 2024-ல் உள்துறை அமைச்சர் அமித் ஷா கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், "நாங்கள் சட்டப்பிரிவு 370-ஐ (ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கிய அரசியல் சட்டப்பிரிவு) ரத்து செய்துள்ளோம். அதனால், மக்களவைத் தேர்தலில் மக்கள் பாஜகவுக்கு 370 இடங்களிலும், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 400 இடங்களிலும் வெற்றியை கொடுத்து ஆசீர்வதிப்பார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று தெரிவித்தார்.

ஜெயந்த் சவுதரியின் ஆர்எல்டி, சிரோமணி அகாலி தளம், இன்னும் சில பிராந்திய கட்சிகள் பாஜகவில் இணைவது குறித்து அவரிடம் கேட்டபோது, "பாஜக குடும்பக்கட்டுப்பாட்டை நம்புகிறது. ஆனால், அரசியலில் இல்லை. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது ஆனால், எதுவும் முடிவாகவில்லை. 2024 மக்களவைத் தேர்தல் என்டிஏ மற்றும் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கு இடையிலான போட்டியாக இருக்காது. வளர்ச்சி மற்றும் வெற்று கோஷங்களுக்கு இடையிலான தேர்தலாக இருக்கும்" என்றார்.

காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தியின் இந்திய ஒற்றுமை யாத்திரை குறித்து கேட்டபோது, "கடந்த 1947-ம் ஆண்டு நாட்டை பிரிப்பதற்கு நேரு காரணமாக இருந்ததால், அவர்களின் குடும்பத்துக்கு இதுபோன்றபேரணிகளை நடத்துவதற்கு உரிமை இல்லை" என்றார்.

மத்திய அரசு தற்போது ஏன் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்ற கேள்விக்கு பதில் அளித்த அமித் ஷா, “கடந்த 2014-ம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தை இழந்தபோது காங்கிரஸ் தலைமையிலான யுபிஏ என்ன குழப்பத்தை ஏற்படுத்திருந்தது என்று அறிந்துகொள்ளும் முழு உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. அந்த நேரத்தில் (2014) பொருளாதாரம் மோசமான நிலையில் இருந்தது. எல்லா நிலையிலும் மோசடிகள் நிறைந்திருந்தன. வெளிநாட்டு நிதி வரவில்லை. அந்த நேரத்தில் நாங்கள் வெள்ளை அறிக்கை வெளியிட்டிருந்தால் அது தவறான செய்தியை வெளிப்படுத்தி இருக்கும்.

10 ஆண்டுகளுக்குப் பிறகு எங்களின் அரசு பொருளாதாரத்தை மீட்டெடுத்துள்ளது. வெளிநாட்டு முதலீடுகள் கொண்டு வந்துள்ளோம். இப்போது ஊழல் எதுவும் இல்லை. அதனால் வெள்ளை அறிக்கை வெளியிட இதுவே சரியான நேரம்” என்றார்.

அயோத்தி ராமர் கோயில் குறித்து அவர் கூறும்போது, “ராமர் பிறந்த இடத்தில் கோயில் கட்டப்பட வேண்டும் என்று 500 - 550 ஆண்டுகள் நாட்டு மக்கள் நம்பி வந்தனர். ஆனால், சமாதான அரசியல், சட்டம் - ஒழுங்கைகாரணம்காட்டி ராமர் கோயில் கட்ட அனுமதிக்கப்படவில்லை" என்றார்.

பொது சிவில் சட்டம் குறித்து கூறும்போது, “பொது சிவில் சட்டம் என்பது நாட்டின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவால் கையெழுத்திடப்பட்ட அரசியல் சாசனக் கொள்கையாகும். ஆனால், காங்கிரஸ் கட்சி சமாதான அரசியல் காரணமாக அதனை நிராகரித்து வந்தது. உத்தராகண்டில் பொது சிவில் சட்டம் அமல்படுத்தப்பட்டிருப்பது ஒரு சமூக மாற்றம். அது அனைத்து தளங்களிலும் விவாதிக்கப்படும். சட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்படும். ஒரு மதசார்பற்ற நாட்டில் மத அடிப்படையிலான சட்டம் இருக்க முடியாது” என்றார் அமித் ஷா.

குடியுரிமை திருத்தச் சட்டம் என்பது புதிதாக குடியுரிமை வழங்குவதற்கான சட்டம்தானே தவிர, யாருடைய குடியுரிமையையும் பறிக்கும் சட்டம் அல்ல. ஆனால், நமது நாட்டில் உள்ள சிறுபான்மையினர் குறிப்பாக முஸ்லிம்கள் தூண்டப்படுகிறார்கள். யாருடைய குடியுரிமையையும் பறிப்பதற்கான அம்சம் எதுவும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் இல்லை. வங்கதேசத்திலும், பாகிஸ்தானிலும் துன்புறுத்தலுக்குஉள்ளாகும் சிறுபான்மையினருக்கு இந்திய குடியுரிமை வழங்குவதற்கான வழிவகைகள் மட்டுமே குடியுரிமை திருத்தச் சட்டத்தில்உள்ளன”என்று அமித் ஷா கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

## சென்னை மெட்ரோ ரயில் 2 ஆம் கட்டப் பணிகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டும்

### பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்



சென்னை, பிப். 11-

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் தொடர்பாகவும், ஒப்புதல் அளிக்கும் நடைமுறையை விரைவுபடுத்திட வேண்டுமென்று கோரியும் பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருக்கிறார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் இது குறித்து எழுதியிருக்கும் கடிதத்தில், “மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து கூட்டு முயற்சி அடிப்படையில், 50:50 என்ற சமபங்கு வீதத்தில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் முதற்கட்டப் பணிகள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டன. இதனடிப்படையில், 63,246 கோடி ரூபாய் செலவில், 119 கிலோமீட்டர் நீளமுள்ள மேலும் மூன்று வழித்தடங்களைக் கொண்ட இரண்டாம் கட்டப் பணிகளுக்கு தமிழக அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மத்திய அரசின் ஒப்புதலுக்காக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு அனுப்பப்பட்டது.

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் மற்றும் நிதிஆயோக் ஆகியவற்றின் பரிந்துரையுடன், ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி, புதிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் நிதி ஒப்புதல்களும் இறுதி செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. இதற்குப் பிறகு, மத்திய உள்துறை அமைச்சர், 21-11-2020 அன்று சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

2021-2022 ஆம் ஆண்டுக்கான மத்திய படஜெட்டில் இத்திட்டத்துக்கான எதிர் நிதியுதவிக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னரும், 17-8-2021 அன்று பொது முதலீட்டு வாரியத்தால் (PIB) பங்கு பகிர்வு மாதிரியின் கீழ் மத்திய துறை திட்டமாக பரிந்துரைக்கப்பட்ட நிலையிலும், மத்திய அரசின் ஒப்புதலை தமிழக அரசு ஆவலுடன் எதிர்பார்த்தது. ஆனால் பிரதமர் உடனான பல்வேறு சந்திப்புகளின்போது இது தொடர்பாக தான் வலியுறுத்தி வந்தபோதிலும், இதில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை, இந்தத் திட்டத்துக்கான முன்மொழிவு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழுவின் ஒப்புதலுக்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேல் காத்திருக்கின்றோம்.

மத்திய அரசின் ஒப்புதலை எதிர்பார்த்து, குறிப்பிட்ட காலவரையறைக்குள் இந்தத் திட்டம் முடிக்கப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக, இரண்டாம் கட்டப் பணிகளை தமிழக அரசு தொடங்கியுள்ளது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக்குழுவின் ஒப்புதல் இல்லாத நிலையில், மத்திய அரசின் பங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் மாநில நிதியில் இருந்து செலவினங்களை மேற்கொண்டு வருவதாகவும், இது பணிகளின் வேகத்தைக் குறைத்துள்ளதோடு, மாநில அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். அப்போதுதான் சென்னை மக்களின் இந்த கனவுத் திட்டத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் செயல்படுத்த முடியும்.

எனவே, இந்த விஷயத்தில் பிரதமர் மோடி தனிப்பட்ட முறையில் தலையிட்டு, முதல் கட்டப் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றிச் செயல்படுத்தியதைப்போல, 50:50 என்ற சமபங்கு வீதத்தில், மத்திய மற்றும் மாநில அரசின் கூட்டு முயற்சியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இரண்டாம் கட்டப் பணிகளையும் விரைந்து நிறைவேற்றிட ஒப்புதல் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## “சரண் சிங்கை அவமதிப்பதை பொறுத்துக்கொள்ள மாட்டேன்” - கார்கே மீது ஜக்தீப் தன்கர் காட்டம்



புதுடெல்லி : பிப். 11-

பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் சரண் சிங்கை, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே அவமதித்து விட்டதாக அவரைச் சாடிய மாநிலங்களவைத் தலைவர் ஜக்தீப் தன்கர், "முன்னாள் பிரதமர் சரண் சிங்கை அவமதிப்பதை பொறுத்துக்கொள்ள மாட்டேன்" என்று தெரிவித்தார்.

ராஷ்ட்ரீய லோக் தளம் கட்சித் தலைவர் ஜெயந்த் சவுத்ரியை மாநிலங்களவையில் பேச அனுமதித்த அவைத் தலைவரின் முடிவை மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியதைத் தொடர்ந்து அவைத் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவையில் பேசிய மல்லிகார்ஜுன கார்கே, "தலைவர்களுக்கு பாரத ரத்னா வழங்குவது குறித்து இங்கு விவாதம் நடக்கவில்லை. நான் அவர்கள் அனைவரையும் வணங்குகிறேன். ஆனால், உறுப்பினர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பும்போது, நீங்கள் (அவைத்தலைவர்) எந்த விதியின் கீழ் என்று கேட்பீர்கள். (நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்) எந்த விதியின் கீழ் அவர் (ஜெயந்த் சவுத்ரி) அவையில் பேச அனுமதிக்கப்பட்டார்.

எங்களுக்கும் பேச அனுமதி வழங்குங்கள். ஒருபுறம் நீங்கள் விதிகளைப் பற்றி பேசுகிறீர்கள். அதற்கு உங்களுக்குவிருப்பஉரிமை இருக்கிறது. அந்த விருப்ப உரிமை சட்டரீதியாக பயன்படுத்தப்பட வேண்டும், உங்கள் விருப்பத்துக்கு ஏற்ப இல்லை" என்று கார்கே தெரிவித்தார். இது, அவையில் பெரும் அமளிக்கு வழி வகுத்தது.

கார்கேவுக்கு பதில் அளித்து பேசிய அவைத் தலைவர், "இப்படியான மொழியை பயன்படுத்தினீர்கள். சவுத்ரி சரண் சிங்கை அவமதிப்பதை நான் பொறுத்துக்கொள்ள மாட்டேன். அவர் தூய்மையான பொது வாழ்க்கை, அப்பழுக்கற்ற நேர்மை மற்றும் விவசாயிகளுக்காக அர்ப்பணிப்புடன் இருந்தார்.

கிட்டத்தட்ட நீங்கள் சவுத்ரி சரண் சிங்கை அவமதித்து விட்டீர்கள். அவரது பெருமையை அவமதித்துவிட்டீர்கள். சரண் சிங்குக்காக உங்களிடம் நேரம் இல்லை. சவுத்ரி சரண் சிங் விவகாரத்தில் அவைக்குள் இதுபோன்ற சூழலை உருவாக்கி நாட்டின் ஒட்டு மொத்த விவாசாயிகளைக் காயப்படுத்தி விட்டீர்கள். நாம் வெட்கித்தலைகுனிய வேண்டும்" என்று தெரிவித்தார்.

பின்னர்பேசியகார்கே, "இது பெருமைக்குரிய விஷயம், முன்னாள் பிரதமர்கள் சவுத்ரி சரண் சிங், பி.வி.நரசிம்ம ராவ், வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் ஆகியோரை வணங்குகிறேன்” என்றார்.

அமளிகளுக்கு இடையில் பேசிய மத்திய இணை அமைச்சர் பர்ஷோத்தம் ரூபலா, "சரண் சிங்குக்கு பாரத ரத்னா வழங்கப்படுவதை காங்கிரஸ் எதிர்ப்பு தெரிவிப்பது ஆச்சரியமாக இருக்கிறது" என்றார்.

சபையில் சரண்சிங்கை காங்கிரஸ் அவமதித்தது அதிர்ச்சியாக இருக்கிறது என்று ஆர்எல்டி தலைவர் ஜெயந்த்சிங் தெரிவித்தார். அவையில் அவர் பேசுகையில், "அடிப்படை உண்மைகளை புரிந்துகொண்ட, அடித்தட்டு மக்களின் குரலை புரிந்துகொண்ட, அவர்களை வலுப்படுத்த நினைக்கும் அரசால் மட்டுமே சரண் சிங்குக்கு பாரத ரத்னா வழங்க முடியும். அதற்காக நான் கடமைப்பட்டுள்ளேன்.

நான் இந்த எதிர்க்கட்சியில் 10 ஆண்டுகள் இருந்துள்ளேன். இந்த அவையில் சில காலம் இந்தப் பக்கம் இருந்திருக்கிறேன். இந்த அரசாங்கத்தின் செயல்பாடுகளில் சவுத்ரி சரண் சிங் பார்வைகள் இருப்பதை நான் பார்க்கிறேன். பிரதமர் மோடி கிராமங்களில் கழிவறை பிரச்சினைகளை பற்றி பேசியபோது, பெண்களுக்கு அதிகாரமளிக்கும் இலக்கை நிர்ணயித்து அதுகுறித்து கிராமங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தியபோது, அதில் சரண் சிங்கின் மேற்கோள்கள் இருந்ததை நான் நினைவு கூறுகிறேன்" என்றார்.

இதனிடையே, மத்திய அமைச்சர் பியூஷ் கோயல், எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தனது கருத்துகளுக்காக மாநிலங்களவைத் தலைவரிடமும், நாட்டு மக்களிடமும் மன்னிப்பு கேட்க வேண்டும்” என்று வலியுறுத்தினார்.




# கண்ணீர் அஞ்சலி

புதுக்கோட்டை, பெரியார் நகர்,
பிளாட் எண். 679 ல் வசித்து வந்த
காலம் சென்ற **நடராஜன் பிள்ளை**
அவர்களுடைய மகனும்,
**கு.ராஜலிங்கம் (லண்டன்)**
அவர்களுடைய தகப்பனாரும்

**புதுகை மாவட்ட மின்சார வாரியத்தில்
பணிபுரிந்து ஓய்வு பெற்ற**

## ந.குணசேகரன் (ADO Retd.) அவர்கள்

(09.02.2024) வெள்ளிக்கிழமை இயற்கை எய்திவிட்டார்.
அன்னாரின் இறுதி ஊர்வலம் நல்லடக்கம்
இன்று 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில்
அவர்கள் இல்லத்திலிருந்து நடைபெறும் என்பதை
ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆழ்ந்த வருத்தத்துடன் : குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள்**

# சீர்காழி அருகே அரசு பேருந்து மோதிய விபத்தில் மளிகை கடை ஊழியர் உயிரிழப்பு; பேருந்தை சிறைபிடித்து பொதுமக்கள் சாலை மறியல்

சீர்காழி, பிப்.11–

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே மேல ஆத்துக்குடி கிராமத்தை சேர்ந்தவர் ராமானுஜம் (65) இவர் சீர்காழியில் உள்ள பிரபல மளிகை கடை ஒன்றில் பணியாற்றி வந்தார். வழக்கம் போல் நேற்று வீட்டிலிருந்து தனது சைக்கிளில் வேலைக்கு புறப்பட்டுச் சென்றுள்ளார்.



சாலையைத்தில்சைக்கினை நிப்பாட்டி செல்லும்போது ஆத்துக்குடி மெயின் ரோடு பகுதியில் சிதம்பரத்திலிருந்து மயிலாடுதுறை நோக்கிசென்ற அரசு பேருந்து முன்னே சென்றவர் மீது மோதியதில் சைக்கிளில் இருந்து தூக்கி எறியப்பட்ட ராமானுஜம் படுகாயம் அடைந்தார். அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார்.



இதனை தொடர்ந்து இப்பகுதியில் அதிவேகத்தில் செல்லும் வாகனங்களால் தொடர் விபத்துகள் ஏற்படுவதாக கூறி ஸ்பீடு பிரேக் அமைக்க வலியுறுத்தி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் சீர்காழி-மயிலாடுதுறை இடையே போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தகவல் அறிந்து வந்த வைத்தீஸ்வரன் கோவில் போலீசார் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வாகனங்களில் வேகத்தை தடுக்கும் வகையில் பேரிகார்டுகளை உடனடியாக அமைத்ததை அடுத்து பொதுமக்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். மேலும் போலீசார் விபத்து குறித்து வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய அரசு பேருந்து ஓட்டுநரை தேடி வருகின்றனர்.



சென்னை ஆர்.கே. நகர் தொகுதிக்குப்பட்ட கொருக்குப்பேட்டை பாரதி நகர் அடுக்கு மாடி குடியிருப்புக்கு பின்புறம் உள்ள காலியான இடத்தில் துணை மின் நிலையம், தண்ணீர் தொட்டி போன்ற திட்டங்கள் அமைக்க உள்ளதாக கூறப்படுகிறது. இதனை நேற்று அந்த தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ.ஜே. எபினேசர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மண்டல குழு உறுப்பினர் நேதாஜி யு. கணேசன், 47 மாமன்ற உறுப்பினர் மணிமேகலை, பகுதி செயலாளர் லோகநாதன், கோவிந்தராஜ், வட்டசெயலாளர் ஏழுமலை, சென்னை மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் கண்ணன், இளநிலை பொறியாளர் ஷெரிப், சென்னை குடிநீர் வாரிய பகுதி பொறியாளர் ராமசாமி, துணை பகுதி பொறியாளர் சர்தார் அகமது உசைன்,உதவி பொறியாளர் லட்சுமி நாராயணன் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.

# தர்மபுரி அரசு நடுநிலைப்பள்ளியில் ஆண்டு விழா உற்சாகமாக கலை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள்

தர்மபுரி, பிப். 11–

தர்மபுரி மாவட்டம், அரூர் அடுத்த சங்கிலிவாடி கிராமத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளியில் ஆண்டு விழா நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி, நடனம், பாடல், நாடகம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நி ஆண்டு விழா பள்ளி தலைமை ஆசிரியர் காந்தா முன்னிலையில் நடைபெற்றது.



பள்ளி ஆண்டு விழாவில் செட்டி அறக்கட்டளைத் தலைவர். செட்டிமணி. பொருளாளர். பர்வின் செந்தில். சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளி தலைமை ஆசிரியர் காந்தா மற்றும் பள்ளி ஆசிரியர் சிவராசு, ஜெஜலட்சுமி, ரொக்கயாபீ, சுதா, டாடா பாரட்லா, அகிலன் ஆகியோர் வெகுசிறப்பாக ஏற்பாடுசெய்து இருந்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கும் செட்டி அறக்கட்டளை சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டது.

# இலுப்பூர் தியாகி கோவிந்தராஜ் 41 ஆம் ஆண்டு நினைவு தின கட்சி நிதியளிப்பு பொதுக்கூட்டம்

தரங்கம்பாடி, பிப். 11–

மயிலாடுதுறை மாவட்டம், இலுப்பூர்-சங்கரன்பந்தலில் இலுப்பூர் தியாகி வீ.கோவிந்தராஜ்-ன் 41 ஆம் ஆண்டு நினைவு தின பொதுக்கூட்டம் மார்க்சிஸ்ட் கட்சியின் தரங்கம்பாடி ஒன்றிய செயலாளர் ஏ.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டக்குழு உறுப்பினர் டி.ஆர்.ராணி, ஒன்றியக்குழு உறுப்பினர் ஆசிக் ரஹ்மான், கிளை செயலாளர் ஜிரமேஷ், மகாலிங்கம், எஸ்ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிளை செயலாளர் என்.பாலகிருஷ்ணன் வரவேற்று பேசினார்.



கட்சியின்மாநிலசெயற்குழு உறுப்பினர் கே.சாமுவேல்ராஜ், மாவட்டச் செயலாளர் பி.சீனிவாசன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் டி.சிம்சன் ஜி.வெண்ணிலா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் காபிரியேல், அம்மையப்பன், அமுல்காஸ்ட்ரோ ஆகியோர் உரையாற்றினர்.

முன்னதாக மார்க்சிஸ்ட் கட்சியின் தரங்கம்பாடி ஒன்றியக்குழு சார்பில் முதற்கட்ட கட்சி நிதியாக 1 லட்சத்து 83 ஆயிரத்து 980 ரூபாயை மாவட்ட செயற்குழு உறுப்பினர் டி.சிம்சன், ஒன்றிய செயலாளர் ஏ.ரவிச்சந்திரன் மாநில செயற்குழு உறுப்பினர் கே.சாமுவேல்ராஜ், மாவட்ட செயலாளர் பி.சீனிவாசன் ஆகியோரிடம் வழங்கினர். சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வந்திருந்த ஏராளமானோர் பொதுக்கூட்டத்தில் கலந்துக்கொண்டனர் நிறைவாக இலுப்பூர் ஆர்.பிரகாஷ் நன்றி கூறினார்.

# தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் 5வது மாநில மாநாடு

சென்னை, பிப்.11–

தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்துடன் இணைந்த, தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் 5வது மாநில மாநாடு சென்னை, ஈஞ்சம்பாக்கம், கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள, விஜிபி ரிசார்ட்டில் நேற்று நடைபெற்றது.



மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக, பேரணியும், சங்கக் கொடி ஏற்றுதல் நிகழ்ச்சியும், அதனை தொடர்ந்து மாநாட்டு அரங்கத் திறப்பு விழாவும் நடைபெற்றது. ஐடிஐ (ITI) நில அளவர் முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறையின் கூடுதல் இயக்குனர் (பணி நிறைவு) வெ.பொன்ராஜ் பேரணியை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் வெ.மகேந்திரகுமார் சங்க கொடி ஏற்றி வைத்து மாநாட்டிற்கு தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை கூடுதல் இயக்குனர் அ. கண்ணபிரான், மு.நெடுஞ்செழியன் மாநாட்டு அரங்கத்தை திறந்து வைத்தார். தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ஆ.பிரபு மாநாட்டிற்கு முன்னிலை வகித்து, வரவேற்பு உரையாற்றினார்.

தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு,மாநாட்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியின் நிறைவில், தமிழ்நாடு நில அளவைத் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில பொருளாளர் சு.கார்த்திகேயன் நன்றி உரையாற்றினார்.

முன்னதாக, மாநாட்டில் நில அளவை களப்பணியாளர்களின் கோரிக்கைகளான... நில அளவைதுறையைதொழில் நுட்பத் துறையாக்க கோருதல், 502 குறுவட்ட அளவர் பணியிடங்களை மீள கோருதல், அனைத்து துறைகளிலும் சார் ஆய்வாளர்கள் பணியிடம் கோருதல் ஆய்வாளர், துணை ஆய்வாளர் ஊதிய முரண்பாட்டை களைதல், வட்ட அளவில் தனி அலுவலகம் அமைக்க கோருதல், புதிய குறு வட்டங்களை உருவாக்க கோருதல், புதிய மண்டலங்களை உருவாக்கக் கோருதல், எஃப்.டி.ஏ (FTA) வை ஊர்தி படியாக்க கோருதல் அளவைப் படி, மலைப் படி கோருதல், வட்டத் துணை ஆய்வாளர்களுக்கு உட்பிரிவு கோப்புகள் அங்கீகரிக்க அதிகாரம் கோருதல் உள்ளிட்ட 10 கோரிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன.



வேளாண் மற்றும் விவசாய நலத்துறை சார்பில் ஆத்மா முன்னோடி திட்டத்தின் கீழ் மீனவர்கள் மற்றும் உள்நாட்டு மீன் வளர்ப்பவர்களுக்கு காப்பிடப்பட்ட குளிர்பெட்டிகளை காரைக்கால் மாவட்டம், நிரவி, திருப்பட்டினம் தொகுதியைச் சார்ந்த 16 நபர்களுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன் நேற்று வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் வேளாண் இயக்குனர் கணேசன் ஆத்ம திட்ட துணை இயக்குனர் ஜெயந்தி , வேளாண்துறை அலுவலர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்.



புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து ஒவ்வொரு மாதமும் இரண்டு சனிக்கிழமைகளில் சிறப்பு மருத்துவர்கள் குழு காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து அங்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் நேற்று காலை 10.00 மணி முதல் நண்பகள் 12.00 மணி வரை புற்றுநோய் மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை சம்பந்தமாக மருத்துவர்கள் குழு வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினர். இந்நிகழ்வில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் நோய் சம்பந்தமாக சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை பெற்று பயன்பெற்றனர்.

# விஷ்ணுவாக்கம் கிராமத்தில் வேகத்தடையில் மோட்டார் சைக்கிள் தவறி விழுந்து பெண் பலி

ஊத்துக்கோட்டை, பிப்11–

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், திருக்கண்டலம் கிராமத்தைச் சேர்ந்தவர் ரீட்டா (50) ஆவார். இவர் நேற்று முன் தினம் திருவள்ளூரில் உள்ள வீரராகவர் திருக்கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய தனது சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். சுவாமி தரிசனம் செய்துவிட்டு நேற்று விடியற்காலை மோட்டார் சைக்கிளில் வீட்டிற்கு புறப்பட்டனர்.

திருவள்ளூர்-செங்குன்றம் நெடுஞ்சாலையில் வெங்கல் அருகே உள்ள விஷ்ணுவாக்கம் என்ற கிராமத்திற்கு வந்தபோது சாலையில் இருந்த வேகத்தடையில் மோட்டார் சைக்கிள் ஏறி இறங்கியது. இதில்,கண் இமைக்கும் நேரத்தில் மோட்டார் சைக்கிளில் இருந்தரீட்டாதூக்கிவீசப்பட்டார். இந்த விபத்தில் தலையின் பின்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டதால் ரத்த வெள்ளத்தில் ரீட்டா உயிருக்கு போராடினார்.



அருகில் இருந்தவர்கள் உடனடியாக அவரை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் ரீட்டா இறந்து விட்டதாக கூறினர். நெடுஞ்சாலையில் உள்ள வேகத்தடையில் மிளிரும் பெயிண்ட் அடிக்காததே இந்த விபத்துக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

எனவே,மேலும்,இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாத வண்ணம் இருக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இந்த சாலைகளில் உள்ள வேகத்தடைகளில் மிளிரும் பெயிண்டை உடனடியாக அடிக்க வேண்டும். இரவு நேரங்களில் வேகத்தடை இருப்பதை வாகன ஓட்டிகள் தெரிந்து கொள்ளும் வகையில் செய்ய வேண்டும் என வாகன ஓட்டிகளும், சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். நடைபெற்ற இந்த விபத்து குறித்து வெங்கல் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர். கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்து விட்டு வீடு திரும்பிய பெண் வேகத்தடையில் கீழே விழுந்து இறந்து போன சம்பவம் இப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# ஈஞ்சம்பாக்கம், கிழக்கு கடற்கரைச் சாலையில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்



சென்னை , பிப்.11–

செட்டிநாடு பொது மருத்துவமனை மற்றும் இந்தியா விஷன் இன்ஸ்டிட்யூட் இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாம் 194 (அ) வட்டக் கழக செயலாளர் குங்பூ மாஸ்டர் எஸ்.கருணா தலைமையில் சென்னை, ஈஞ்சம்பாக்கம், கிழக்கு கடற்கரைச் சாலையில் உள்ள சின்னதம்பி திருமண மண்டபத்தில் நேற்று காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை நடைபெற்றது.

இந்த இலவச மருத்துவ முகாமினை சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் தொடங்கி வைத்தார். இந்த மருத்துவ முகாமில் பொது மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், தோல் மருத்துவம், பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவம், பல் மருத்துவம் கண்புரை மற்றும் பார்வை கோளாறு தொடர்பான அனைத்து குறைபாடுகளுக்கும் இலவச மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டதுடன் மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன. கண் பார்வை தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டு, தேவை உள்ளவர்களுக்கு உடனடியாக இலவசமாக கண்ணாடி வழங்கப்பட்டது. இதனை சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ் பயனாளிகளுக்கு வழங்கி சிறப்பித்தார்.

மேலும், டிபிசிஎஸ் (DBCS) திட்டத்தின் கீழ் கண்புரை அறுவை சிகிச்சையும் இலவசமாக செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மருத்துவ முகாமில் சுமார் 500க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.


கனம் வருவாய் கோட்டாச்சியர்
அவர்கள்,புதுக்கோட்டை
ந.க.அ6/073/2024
நாள்.10.02.2024.

த.மாமுண்டி
த/பெ. தங்கராசு அம்மா புதுப்பட்டி
சுந்தம்பட்டி(வ) கல்லாக்கோட்டை சரகம்
கந்தர்வக்கோட்டை (TK) 613301
புதுக்கோட்டை (DT).

**மனுதாரர்**

வட்டாச்சியர்,
வட்டாச்சியர் அலுவலகம்,
கந்தர்வக்கோட்டை.

**எதிர்மனுதாரர்**

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் மாமுண்டி அவர்களின் தாத்தாவுமாகிய (அப்பா தகப்பனார்) ராசு கடந்த 15.01.1981 வருடம் மேலே கண்ட முகவரியில் இறந்துவிட்டார், அவரது இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட கோரி மனுதாக்கள் செய்யப்பட்டுள்ளது, மனுதாரரின் தாத்தா இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி புதுக்கோட்டை வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர்
த.மாமுண்டி
த/பெ. தங்கராசு அம்மா புதுப்பட்டி
சுந்தம்பட்டி(வ) கல்லாக்கோட்டை சரகம்
கந்தர்வக்கோட்டை (TK) 613301
புதுக்கோட்டை (DT).
செல் நம்பர்.6379183097

கனம் வருவாய் கோட்டாச்சியர்
அவர்கள், புதுக்கோட்டை
ந.க.அ6/075/2024
நாள்.10.02.2024.

த.மாமுண்டி
த/பெ. தங்கராசு அம்மா புதுப்பட்டி
சுந்தம்பட்டி(வ) கல்லாக்கோட்டை சரகம்
கந்தர்வக்கோட்டை (TK) 613301
புதுக்கோட்டை (DT).

**மனுதாரர்**

வட்டாச்சியர்,
வட்டாச்சியர் அலுவலகம்,
கந்தர்வக்கோட்டை.

**எதிர்மனுதாரர்**

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரர் மாமுண்டி அவர்களின் (அப்பா தாயார்) கருப்பாயி கடந்த 13.02.2013 வருடம் மேலே கண்ட முகவரியில் இறந்துவிட்டார், அவரது இறப்பை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவிட கோரி மனுதாக்கள் செய்யப்பட்டுள்ளது, மனுதாரரின் தாத்தா இறப்பை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி புதுக்கோட்டை வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்து கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர்
த.மாமுண்டி
த/பெ. தங்கராசு அம்மா புதுப்பட்டி
சுந்தம்பட்டி(வ) கல்லாக்கோட்டை சரகம்
கந்தர்வக்கோட்டை (TK) 613301
புதுக்கோட்டை (DT).
செல் நம்பர்.6379183097




தமிழக பாஜகவின் மாநிலத்தலைவர் அண்ணாமலையின் என் மண் என் மக்கள் யாத்திரை 196வது சட்டமன்ற தொகுதியாக உத்திரமேரூரில் நேற்று நடைபெற்றது இறுதியாக அவர் உரையாற்றியபோது எடுத்தபடம்



இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அறிவுலத்தின் படி திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் தலைமையில் திருவொற்றியூர் கே வி கே குப்பத்தில் நடைப்பெற்ற நிகழ்ச்சியில் மிக்ஜாம் புயலினாள் பாதிக்கப்பட்ட 5 வார்டு பொதுமக்கள் இஸ்லாமியர்கள் தூய்மை பணியாளர்கள் 1500 பேருக்கு அரிசி பருப்பு எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்களை மாமன்ற உறுப்பினர் கே. பி. சொக்கலிங்கம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் செயற்குழு உறுப்பினர் ராமநாதன், ஆர்.டி. மதன்குமார், செல்வம், பால உமாபதி, திமுக பேச்சாளர் கருணாநிதி, பிரபா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



திருக்கழுக்குன்றத்தில் இயங்கி வரும் அருள்மிகு திருப்புரசுந்தரி அம்மன் தொழில் நுட்ப கல்லூரியில் நேற்று பள்ளிகள் அளவிலான வாலிபால் போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டிகளை கல்லூரியின் முதல்வர் சாய்கிருஷ்ணன் துவக்கி வைத்தார். பல்வேறு பள்ளி அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டியில் இறுதியாக செங்கல்பட்டு ராமகிருஷ்ணா மிஷன் மேல்நிலை பள்ளி அணி முதலிடமும் பிடித்தது. திருக்கழுக்குன்றம் அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளி அணி இரண்டாம் இடத்தை தட்டி சென்றது. மேலும் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகளை கல்லூரியின் முதல்வர் சாய்கிருஷ்ணன் வழங்கினார்.



சென்னை பழைய வண்ணராப்பேட்டை சஜ்ஜா முனுசாமி தெருவில் வசிப்பவர் பாபு சுந்தரம். இவர் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த 13வட்ட முன்னாள் மாமன்ற உறுப்பினர். இவர் மாமன்ற உறுப்பினராக இருந்த சமயத்தில் பொது மக்களுக்காக கழிவுநீர் மற்றும் குடிநீர் வசதியை மிகவும் எளிமை முறையில் பெற்று தந்துள்ளார்.இந்த நிலையில் நேற்று அவர் பத்திர்கையாளர்களுக்கு ஒரு கோரிக்கை மனு அளித்தார் அதில் அவர் கூறி இருப்பதாவது எங்கள் வீட்டிற்கும் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு சரியாக குடிநீர் வருவதில்லை என சென்னை குடிநீர் வாரிய பகுதி பொறியாளர் ராமமூர்த்தியிடம் புகார் அளித்துள்ளார் .இதனால் அவர் வீட்டிற்கு லாரி மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. இது குறித்து சம்மந்தபட்ட அதிகாரிகள் அவர் வீட்டிற்கு சென்று ஆய்வு செய்து சரி செய்தனர். பின்பு லாரி மூலம் கொண்டுவரபட்ட தண்ணீரை நிறுத்தி விட்டனர் சம்மந்தப்பட்ட அதிகாரிகள். ஆனால் தற்போது அவர் வீட்டில் உள்ள பம்பில் முறையாக தண்ணீர் வராததால் மீண்டும் லாரி மூலம் தண்ணீர் வேண்டி மனு கொடுக்க சென்றால் அங்கு பகுதி அலுவலகத்தில் பொறியாளர் இருப்பதே இல்லை.என்றும் எனவே சம்மந்தப்பட்ட சென்னை குடிநீர் வாரிய அதிகாரிகள் உடனடியாக இதனை சரி செய்து தருமாறு நேற்று மீண்டும் மனு அளித்துள்ளார். இதனை சரி செய்வார்களா சம்மந்தப்பட்ட அதிகாரிகள் என பாபுசுந்தரம் வருத்தத்துடன் தெரிவித்தார்.

# புதுக்கோட்டையில் பள்ளி மாணவர்களுக்கான புத்தாக்க மேம்பாட்டு பயிற்சி மாணவர்களுக்கு முதன்மைக்கல்வி அலுவலர் சான்றிதழ்களை வழங்கினார்




புதுக்கோட்டை, பிப்,11-

புதுக்கோட்டை மவுண்ட்சீயோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 9- ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் , பள்ளிக்கல்வித்துறை, யுனிசெப் நிறுவனம் இணைந்து நடத்திய புத்தாக்க மேம்பாட்டு பயிற்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் மா.மஞ்சுளா கலந்துகொண்டு தலைமை தாங்கி பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பேசும்போது கூறியதாவது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் 9- ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டம் தமிழ்நாடு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், பள்ளிக்கல்வித்துறை, யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து மிக சிறப்பாக நடத்திக்கொண்டு வருகிறது. மாணவர்களின் சிந்தனையில் உதித்த புதிய கருத்துகளை அறிவியல் கண்டுபிடிப்புகளாக மாற்றி அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றும் மகத்தான திட்டம் பள்ளி புத்தாக்க மேம்பாட்டு திட்டமாகும். இத்திட்டத்தில் நம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 125 மேல்நிலைப் பள்ளிகளில் இருந்து 136 ஆசிரியர்கள் 3101 மாணவர்கள் பதிவு செய்துள்ளனர் இத்திட்டத்தில் வழிகாட்டி ஆசிரியர்கள் மாணவர்களின் விவரங்களை பதிவு செய்தல் வழிகாட்டி ஆசிரியர் மற்றும் மாணவர்களின் பாடங்களை முடித்தல் புதுமை யோசனைகளை சமர்ப்பித்தல் ஆகிய நிலைகளில் 100% நம் மாவட்டம் முடித்து அதிலிருந்து சிறந்த ஏழு அணிகள் தேர்வு செய்யப்பட்டு பள்ளிகளின் மாணவர் குழுக்கள் தங்களது படைப்புகளை முன்மாதிரியாக உருவாக்க மாவட்ட அளவிலான முகாமில் பங்கேற்று செய்துள்ளீர்கள். மாவட்ட அளவில் தேர்வு செய்யப்பட்ட ஏழு அணிகளுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் மாவட்ட அளவில் முதல் பரிசு வென்றால் ரூபாய் இருபத்தைந்தாயிரம், முதல் பரிசு வென்ற மாணவர் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றால் ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட இருக்கிறது. எனவே இங்கு பங்கேற்றுள்ள மாணவர்கள் தங்களது படைப்புகளின் வாயிலாக போட்டிகளில் வெல்ல என் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தை நம் புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திக் கொண்டு வரும் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளருக்கும்,ஈ.டி 2 கள ஒருங்கிணைப்பாளருக்கும் (பொ) பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கும், வழிகாட்டி ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மீண்டும் என் வாழ்த்துகளை மனதார தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் பேசினார் முன்னதாக மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் மெ.சி. சாலை செந்தில் வரவேற்று பேசினார். இந்த நிகழ்ச்சியில் மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியின் முதல்வர் (நிர்வாகம்) எஸ். கிருபா ஜெபராஜ் மற்றும் பலர் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினர். நிறைவாக மாவட்ட ஈ.டி2 ஒருங்கிணைப்பாளர்(பொ) அருமைரூபன்ஜோசப் நன்றி கூறினார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித்துறை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலம் மதுரை மாவட்டம் அவனியாபுரம் திட்டப் பகுதியில் ரூ.7.32 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 64( G+3) அடுக்குமாடி குடியிருப்புகளை குத்து விளக்கேற்றி திறந்து வைத்து குடியிருப்புகளுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர் உடன் உள்ளனர்.



அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமாரின் அறிவுறுத்தலுக்கிணங்க ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் மார்ட்டின்லூதர்கிங் உத்தரவின் பேரில் ஆவுடையார்கோவில் தலைமை நில அளவையர் பழனிச்சாமி, பொன்பேத்தி சரக வருவாய் ஆய்வாளர் போத்திராஜ், பொன்பேத்தி கிராம நிர்வாக அலுவலர் சாலமோன் இம்மானுயேல் மற்றும் பொன்பேத்தி சரக அனைத்து கிராம உதவியாளர்களால் கொழுவன் ஆறு ஆக்கிரமிப்பு தொடர்பாக அப்பகுதிகள் நில அளவை செய்யப்பட்டது.

# கோவையில் 12 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் சோதனை



கோவை, பிப். 11-

கோவையில் 12 இடங்களில் என்ஐ.ஏ அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.

கோவை உக்கடத்தை அடுத்த, கோட்டைமேடு சங்கமேஸ்வரர் கோயில் அருகே, கடந்த 2022-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ம் தேதி கார் வெடிப்புச் சம்பவம் நடந்தது. இதில் காரை ஓட்டி வந்த ஜமேஷா முபின் உயிரிழந்தார். போலீஸாரின் விசாரணையில் ஐஎஸ் தீவிரவாத அமைப்பின் ஆதரவாளரான முபின், மக்கள் கூடும் இடத்தில் தாக்குதல் நடத்த திட்டமிட்டது தெரியவந்தது. பின்னர் இந்த வழக்கு தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) பிரிவுக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக 14 பேர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணையின் போது, என்.ஐ.ஏ. அதிகாரிகள் கோவையில் பல்வேறு இடங்களில் அடிக்கடி சோதனை நடத்தினர். கார் வெடிப்பு வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட நபர்களின் இடங்கள், அவர்களுக்கு தொடர்புடைய இடங்கள் என பல்வேறு இடங்களில் தொடர்ச்சியாக சோதனைகள் நடத்தப்பட்டன. அப்போது குனியமுத்தூர் பகுதியில் இயங்கி வந்த தனியார் அரபிக் மொழியை கற்றுக் கொடுக்கும் கல்லூரியிலும் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அந்த சோதனையின் போது, அக்கல்லூரியில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு ஆதரவு தொடர்பான ஆவணங்கள், அந்த அமைப்புக்கு ஆட்களை மூளைச்சலவை செய்து அனுப்புவது தொடர்பான ஆவணங்கள் உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டது. அதனடிப்படையில், ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பு ஆதரவு விவகாரம் தொடர்பாக என்.ஐ.ஏ சென்னை பிரிவு அதிகாரிகள் கடந்தாண்டு வழக்குப்பதிந்தனர். அதனடிப்படையில், மேற்கண்ட வழக்கு தொடர்பாக கோவை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடந்தாண்டு சோதனை நடத்தினர்.

அதன் தொடர்ச்சியாக கோவையில் 12 இடங்களில் என்.ஐ.ஏ அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர். இதற்காக திட்டமிட்டப்படி, என்.ஐ.ஏ அதிகாரிகள் பல்வேறு குழுக்களாக பிரிந்து நேற்று காலை கோவைக்கு வந்தனர். கோவை அல் அமீன் காலனியில் ஹபிபுல்லா வீடு, அருள் நகரில் (அன்புநகர்) அபுதாகீர் வீடு, என்.எஸ். கார்டனில் பைசல் ரகுமான் வீடு, அற்புதம் நகரில் சலாவுதீன் வீடு, கரும்புக்கடை கிரீன் கார்டனில் அனீஷ் முகமது வீடு, பால் கம்பெனி, ஆர்.எஸ்.புரத்தில் கமீல் வீடு, குனியமுத்தூர் ராஜுநகரில் சுதிர் முகமது வீடு, சீரபாளையம் மதுக்கரையில் முகமது அலி ஜின்னா வீடு, போத்தனூர் அமீர்சாகிப் வீதியில் நாசர் வீடு மற்றும் 3 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. அரபிக் கல்லூரியில் நேரடியாக படித்தவர்கள், ஆன்லைன் வாயிலாக படித்தவர்கள், அவர்களுடன் தொடர்புடையவர்கள் என்பதன் அடிப்படையில் மேற்கண்ட இடங்களில் சோதனை நடத்தப்பட்டதாக என்.ஐ.ஏ அதிகாரிகள் வட்டாரத்தினர் தெரிவித்தனர். இந்தச் சோதனையில் செல்போன்கள் உள்ளிட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

# “2040-க்குள் நிலவில் இந்தியர் கால் பதிப்பார்” ‘சந்திரயான் 3’ திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் உறுதி



உதகை : பிப். 11-

2040-ம் ஆண்டுக்கு இந்தியா மனிதனை நிலவுக்கு அனுப்பும் பணி நிறைவேற்றப்படும் என ‘சந்திரயான் 3’ திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் உதகையில் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள ஜெஎஸ்எஸ். பார்மசி கல்லூரியில் ‘விண்வெளியில் இந்தியா’ என்ற தலைப்பில் கருத்தரங்குநடைபெற்றது. அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் நடந்த இந்த கருத்தரங்கில் சந்திரயான் 3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, மாணவர்களுக்கு விண்வெளி குறித்தும், சந்திராயன் திட்டங்கள் குறித்தும் எடுத்துரைத்தார்.

அவர் நிருபர்களிடம் கூறியது: “ஊரகப் பகுதிகளில் உள்ள அரசு மற்றும் ஊரக பள்ளி மாணவர்களை ஊக்கமளிக்கும் வகையில் விண்வெளி மற்றும் சந்திரயான் திட்டங்கள் குறித்து அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நேற்று உதகையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. இஸ்ரோ சார்பில் ரிமோட் சென்சிங், தகவல் தொடர்பு, வானிலை, ஜிபிஆர்எஸ், வழிக்காட்டி, கடலியல் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், செவ்வாய் கிரகம், சூரியன் ஆகியவற்றை ஆய்வு செய்ய கோள்கள் விண்ணுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

அறிவியல் சார்ந்த செயற்கைக்கோள்கள் விண்ணுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் பெறப்படும் தகவல்கள் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு பயனுள்ளதாக அமைந்தது வருகிறது. இந்நிலையில், இந்தியா சார்பில் விண்வெளியில், விண்வெளி ஆராய்ச்சி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்தியாசார்பில்வரும்2040-ம் ஆண்டுக்குள் மனிதனை நிலவுக்கு அனுப்பும் பணி நிறைவேற்றப்படும். சந்திராயன் 3 செயற்கைக்கோள் லேண்டர் மற்றும் ரோவர் அடங்கியது. இதன் ஆயுட்காலம் ஒருலூனார் நாளாகும். அதன் ஆயுட்காலம் முடிவடைந்து விட்டது. அந்த செயற்கைக்கோள் எந்த நோக்கத்துக்காக விண்ணுக்கு செலுத்தப்பட்டதோ அந்த நோக்கம் முழுமையாக நிறைவேறியுள்ளது.

இந்தத் திட்டத்தில் மற்றொரு சாதனையாக லேண்டர் எந்த இடத்தில் தரை இயக்கப்பட்டதோ அந்த இடத்திலிருந்து வேறொரு இடத்துக்கு அதே எஞ்சின் கொண்டு செல்லப்பட்டு தரையிறக்கப்பட்டது. இந்த திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட ஆர்பிட்டர் நிலவின் சுற்றுவட்ட பாதையிலிருந்து மீண்டும் பூமிக்கு வெற்றிகரமாக திரும்ப கொண்டு வரப்பட்டது. இதிலிருந்து பெறப்படும் தகவல்கள் பிற திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும்” என்று அவர் கூறினார்.

இந்தக் கருத்தரங்களில் நீலகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கீதா, பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சங்கரன்கோவில் ஸ்ரீ மகா சக்தி வராஹி அம்பாள் கோயில் வருசாபிசேக விழா – திரளான பக்தர்கள் பங்கேற்பு



சங்கரன்கோவில், பிப்.11-

சங்கரன்கோவில் தாலுகா களப்பாகுளம் முதல் உடப்பன்குளம் செல்லும் இணைப்பு சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ மகா சக்தி வராஹி அம்மாள் கோயில் 10ம் ஆண்டு வருசாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது, இதனை முன்னிட்டு ஸ்ரீ வலம்புரி விநாயகர், ஸ்ரீ மகா சக்தி வராஹி , ஸ்ரீ உன்மத்த பைரவர் மற்றும் பரிவார தேவதைகளுக்கு சிறப்பு யாக பூஜை நடத்தப்பட்டது.

தொடர்ந்து கும்ப கலசத்திற்கு புனித நீர் அபிஷேகம் செய்யப்பட்டது, மதியம் அபிஷேகங்களும், அதனைத் தொடர்ந்து தீபாராதனைகளும் நடைபெற்றது, தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. பூஜைகளை கடையநல்லூர் சக்தி கணேஷ் சுவாமிகள் மற்றும் சிவாச்சாரியார்கள் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் வக்கீல் சண்முகையா, பாஜக வெளிநாடு தமிழ் வளர்ச்சி பிரிவு மாநிலத் துணைத் தலைவர் ஆனந்தன், தென்காசி மாவட்ட செயலாளர்கள் ராஜலட்சுமி, சுப்பிரமணியன், மற்றும் மாணிக்கம் தேன்மொழிமுத்துசாமி ,கணேசன், பிஏஎஸ் சக்திவேல், சி எஸ் எம் எஸ் சங்கரசுப்பிரமணியன், அனுசுயா மாரிமுத்து, செந்தாமரை, மாணிக்கம், ஜெயராமன், பரமசிவன் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர், ஏற்பாடுகளை வாராஹி அம்பாள் உபாசகர் சக்திவேல் மற்றும் பரம கணேசன், முருகன்,பலவேசம் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

# கர்நாடகாவில் பெல்லாரி காங்கிரஸ் எம்எல்ஏவுக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை சோதனை



பெங்களூரு : பிப். 11,

கர்நாடக மாநிலம் பெல்லாரி தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏ நர பரத் ரெட்டிக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

மொத்தமாக பரத் ரெட்டிக்கு சொந்தமான 6 இடங்களில் சோதனை நடைபெற்றது. பெல்லாரி பகுதியில் மட்டும் நான்கு இடங்களில் சோதனை நடைபெற்றது. இதுதவிர, சென்னையில் உள்ள பரத் ரெட்டியின் அலுவலகம், அவரது தந்தையின் அலுவலகம், அவரது மாமா பிரதா ரெட்டியின் வீடு மற்றும் அலுவலகம் என முக்கிய இடங்களில் சோதனை தீவிரமாக நடந்தது.

அத்தனை இடங்களிலும் நேற்று காலை 6.30 மணிக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனையை தொடங்கினர். பெங்களூரில் இருந்துவந்த அதிகாரிகள் நான்கு குழுக்களாக பிரிந்து சோதனையை மேற்கொண்டனர். பரத் ரெட்டி மற்றும் அவரது உறவினர்கள் மீது எந்த வழக்கின் அடிப்படையில் சோதனை நடத்தப்பட்டது என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

பெல்லாரி தொகுதியில் முதல் முறையாக போட்டியிட்டு எம்எல்ஏ ஆனவர் நர பரத் ரெட்டி. பெல்லாரி பிரபல சுரங்க தொழிலதிபர் ஜனார்தன் ரெட்டியின் கோட்டையாக கருதப்படும் இடம். கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிட்ட ஜனார்தன் ரெட்டியின் சகோதரர் ஜி.சோமசேகர் ரெட்டி, கேஆர்பிபி கட்சி சார்பில் போட்டியிட்ட ஜனார்த்தன் ரெட்டியின் மனைவி அருணா லட்சுமி ஆகியோரை எதிர்த்து காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு நர பரத் ரெட்டி வெற்றிவாகை சூடினார். கர்நாடகாவின் குருகோடு தொகுதியின் முன்னாள் எம்.எல்.ஏ-வான சூர்யநாராயண ரெட்டியின் மகன்தான் பரத் ரெட்டி.

கர்நாடக மாநில அரசியல் தலைவர்களில் செல்வாக்குமிகுந்த இளம் தலைவராக அறியப்படுகிறார் இவர். காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு சுரங்க தொழிலதிபர் ஜனார்தன் ரெட்டியை தொடர்ந்து எதிர்த்து வரும் இவர், அவருக்கு எதிராக சட்டசபையில் நடத்திவரும் அதிரடி விவாதங்களை நடத்தியது பேசுபொருளானது.

எனினும், ஜனார்தன் ரெட்டியை போலவே பரத் ரெட்டியின் குடும்பமும் கிரானைட் குவாரி தொழில் நடத்தி வருகிறது. இவர்களின் குடும்பத்துக்கு கர்நாடகாவின் கொப்பல் மாவட்டத்தில் ஒன்று, ஆந்திராவின் ஓங்கோல் மாவட்டத்தில் ஒன்று என இரண்டு கிரானைட் குவாரிகள் சொந்தமாக உள்ளன.

# “பஞ்சாப், சண்டிகரில் 14 தொகுதிகளிலும் ஆம் ஆத்மி போட்டி” – கேஜ்ரிவால் அறிவிப்பு



*புதுடெல்லி : பிப். 11-*

*பஞ்சாப் மற்றும் சண்டிகரில் மொத்தம் 14 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. இதில் ஆம் ஆத்மியே அனைத்து தொகுதிகளிலும் போட்டியிடும் என ஆம் ஆத்மி கட்சி ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முதல்வருமான அரவிந்த் கேஜ்ரிவால் அறிவித்திருக்கிறார்.*

*பஞ்சாப்அரசின்தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நியாய விலை பொருள்கள் வீட்டு வாசலில் வழங்கும் திட்டத்தை அரவிந்த் கேஜ்ரிவால் நேற்று தொடங்கிவைத்தார். அதைத் தொடர்ந்து பேசிய அவர், “இரண்டு வருடங்களுக்கு முன்னதாக (சட்டசபை தேர்தலில்) உங்களின் ஆசீர்வாதம் எங்களுக்குக் கிடைத்தது. 117 இடங்களில் 92 இடங்களை ஆம் ஆத்மி பெற்று பஞ்சாபில் சாதனை புரிந்தது. தற்போது மக்களவைத் தேர்தல் இரண்டு மாதங்களில் நடைபெற உள்ளது.*

*இன்று மீண்டும் உங்கள் ஆசிர்வாதத்தை நாடி வந்திருக்கிறேன். பஞ்சாபில் 13 இடங்களும், சண்டீகரில் ஒரு இடமும் என மொத்தம் 14 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. ஆம் ஆத்மி வரும் 10-15 நாள்களுக்குள் 14 தொகுதிகளிலும் தனது வேட்பாளர்களை அறிவிக்கும். இந்த 14 தொகுதிகளிலும் எங்களது கட்சியை வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” என்றார்.*

# “தேர்தல் முடிந்ததும் பாஜகவில் ஓபிஎஸ் இணைந்து விடுவார்” – ஜெயக்குமார் கணிப்பு



சென்னை, பிப். 11-

"தேர்தல் முடிந்ததும் பாஜகவில் இணைந்து விடுவார் ஓபிஎஸ். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. பாஜகவுக்காக கூலிக்கு மாரடிப்பவராக இன்று ஓபிஎஸ்ஸின் குரல் இருக்கிறது" என அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “தேர்தல் முடிந்ததும் பாஜகவில் இணைந்து விடுவார் ஓபிஎஸ். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை. பாஜவுக்காக கூலிக்கு மாரடிப்பவராக இன்று ஓபிஎஸின் குரல் இருக்கிறது. தேர்தல் முடிந்த பிறகு ஓபிஎஸ் பாஜகவில் ஐக்கியமாவது உறுதி. பாஜக இல்லாத ஒரு மகத்தான கூட்டணி அதிமுக சார்பில் அமையும்.

இன்னும் தேர்தலுக்கு நாட்கள் இருக்கும் நிலையில், அனைத்தையும் பொறுத்திருந்து பாருங்கள். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எத்தனையோ நல்ல திட்டங்களை கொண்டு வந்தார்கள். ஆனால், திமுக அரசு, அதற்கு மூடுவிழா செய்துவிட்டது. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு எடப்பாடி பழனிசாமி நல்லாட்சியை வழங்கினார்.

எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் தேர்தலை தனித்து சந்தித்து இருக்கிறார்கள், அதில் மகத்தான வெற்றியையும் பெற்றிருக்கிறார்கள். கூட்டணி அமைத்துதான் மகத்தான வெற்றி பெற வேண்டும் என்பது கிடையாது. அதற்காக கூட்டணி இல்லை என்று சொல்ல வேண்டாம். இன்னும் நாட்கள் இருக்கின்றன.

எங்களுடைய தனித்தன்மையை பல கட்டங்களில் நிரூபித்து இருக்கிறோம். பாஜவுடன் இப்போது கூட்டணி இல்லை, எப்போதும் கூட்டணி இல்லை என்ற நிலையை எடுத்து விட்டோம். தேர்தலுக்கான தேதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. நாங்கள் யாரிடமும் கெஞ்ச வேண்டிய அவசியம் கிடையாது. அதிமுக தலைமையில் மகத்தான கூட்டணி அமையும். எங்களை நோக்கிதான் கட்சிகள் வரும்” என்றார் ஜெயக்குமார்.

# “பாரத ரத்னா விருது அறிவிப்பை சர்ச்சையாக்க வேண்டாம்” – தேவகவுடா அறிவுரை



புதுடெல்லி : பிப். 11-

பாரத ரத்னா விருதை சர்ச்சையாக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகளை முன்னாள் பிரதமர் தேவகவுடா கேட்டுக்கொண்டுள்ளார்.

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா குறித்த விவாதத்தில் பங்கேற்று மாநிலங்களவையில் பேசிய முன்னாள் பிரதமரும் மதச்சார்பற்ற ஜனதா தளம் கட்சியின் தலைவருமான தேவகவுடா, "மிக உயர்ந்த தலைவர்களுக்கு பாரத ரத்னா விருது கொடுப்பது என்ற மிக முக்கிய முடிவை பிரதமர் மோடி எடுத்துள்ளார். அதில் தேவையற்ற சர்ச்சையை ஏற்படுத்த முயல வேண்டாம்.

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழாவில் நானும் எனது மனைவியும் கலந்து கொண்டோம். லட்சக்கணக்கான இந்தியர்களைப் போன்றே அந்த தருணம் எனக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியையும், பக்தியையும் அளித்தது. அயோத்தி ராமர் நமது இதயங்களிலும் மனங்களிலும் நிறைந்திருக்கிறார். நமது முன்னோர்களும் மூத்தவர்களும் ராமரின் உருவம் நமது மனங்களில் நிரந்தரமாக இருக்கும்படி செய்துள்ளார்கள். ராமர் நேர்மையின்; பணிவின் வடிவம். தர்மத்தையும் ராஜ தர்மத்தையும் பின்பற்றியவர். அனைவரையும் தன்னோடு இணைத்துக்கெண்டவர்.

பகவான் ராமரின் நற்பண்புகள்தான் மகாத்மா காந்தியை வழிநடத்தின. நமது நாட்டின் நற்பண்புகளின் அடையாளமாக ராமர் திகழ்கிறார் என கூறியவர் மகாத்மா காந்தி. பகவான் ராமர் மற்றும் அவரது தெய்வீகத்தின் மூலம் நமது நாடு இணைக்கப்பட்டுள்ளது. நமது நாட்டின் அடித்தளமாக அவர் இருக்கிறார். அயோத்தி ராமர் கோயில் நமது நாட்டின் மற்றும் உலகின் அடையாளமாக திகழ வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன். மற்றொரு விஷயம் என்னை மகிழ்ச்சி அடையச் செய்தது. அது, ராமர் கோயில் பிராண பிரதிஷ்டைக்காக பிரதமர் மோடி 11 நாட்கள் விரதம் இருந்தது. இந்த விழாவுக்காக அவர் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்" என தெரிவித்தார்.










PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு உலகம்

# அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் இந்திய வம்சாவளி நபர் அடித்துக் கொலை : 2024-ல் 6வது சம்பவம்

**வாஷிங்டன் : பிப். 11, அமெரிக்காவின் வாஷிங்டன் மாநகரத்தில் உள்ள ஓர் உணவகத்துக்கு வெளியே இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் ஒருவர் தலையில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.**



அடித்துக் கொல்லப்பட்டவர் வர்ஜினியாவில்லுள்ள நிறுவனம் ஒன்றில் நிர்வாகியாக வேலை பார்த்து வந்த, விவேக் சந்தர் தனேஜா (41) என்பது தெரியவந்துள்ளது. இவர் மீதான தாக்குதல் சம்பவம் குறித்து போலீஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீஸார் தனேஜா காயங்களுடன் இருப்பதைக் கண்டு அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். என்றாலும் சிகிச்சை பலனின்றி அவர் மரணமடைந்தார். விவேக் சந்தர் தனேஜாவின் மரணத்தை போலீஸார் கொலை என்றே பதிவு செய்துள்ளனர்.

இது தொடர்பாக யாரும் கைது செய்யப்படாத நிலையில், தாக்குதலில் ஈடுபட்ட நபர் அங்குள்ள கண்காணிப்பு காமிராவில் பதிவாகியிருப்பதாக கூறப்படுகிறது. இதனிடையே வாஷிங்டன் மாநகர குற்றத் தடுப்புப் பிரிவு கொலைக் குற்றவாளியை கண்டுபிடிப்பதில் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

இதுகுறித்து, கொலம்பியா மாவட்டத்தில் நடைபெறும் கொலைகளுக்கு காரணமான நபர் அல்லது நபர்களை கைது செய்து தண்டனை பெற்றுத்தரக்கூடிய வகையிலான தகவல்களைத் தரும் நபர்களுக்கு 25,000 டாலர் வரை வெகுமதி தரப்படும் என்று போலீஸார் தெரிவித்துள்ளனர். தகவல் தருவதற்கான எண்களையும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் இந்தாண்டில் இதுவரையில் கொல்லப்பட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 6வது நபர் விவேக் சந்தராவார். முன்னதாக, அமெரிக்க பாஸ்போர்ட் வைத்திருந்த 19 வயதான இந்திய மாணவர் ஷ்ரேயாஸ் ரெட்டி பெனிகர் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். இந்த வாரத்தின் தொடக்கத்தில் இந்திய மாணவரான நீல் ஆச்சாரியா, பர்டு பல்கலை., வளாகத்தில் உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டார். ஹரியானாவைச் சேர்ந்த விவேக் சைனி என்ற 25 வயது மாணவர் ஜார்ஜியாவின் லிதோனியாவில் வீடில்லாத ஒருவரால் சுத்தியலால் அடித்துக் கொல்லப்பட்டார். இல்லினோய்ஸ் அர்பானா சாம்பெய்ன் பல்கலைக்கழகத்துக்கு வெளியே மற்றொரு இந்திய மாணவரான அகுல் தவான் இறந்துகிடந்தார். இந்தியாவை சேர்ந்த 23 வயதான முனைவர் பட்ட மாணவரான சமீர் காமத் மர்மமாக இறந்தார். இந்த நிலையில், வாஷிங்டனில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சமீர் காமத் தலையில் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

# ‘பாகிஸ்தான் பொதுத் தேர்தலில் மோசடி’ விசாரணைக்கு மேற்கத்திய நாடுகள் வலியுறுத்தல்

**இஸ்லாமாபாத் : பிப். 11, பாகிஸ்தான் பொதுத் தேர்தல் மோசடிகள் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை வலியுறுத்தியுள்ளன.**

பாகிஸ்தானின் தேசிய அவை மற்றும் மாகாண அவைகளுக்கான தேர்தல் கடந்த 8-ம் தேதி நடைபெற்றது. காலை 8 மணிக்குத் தொடங்கிய தேர்தல் மாலை 5 மணிக்கு முடிவடைந்தது. இதனையடுத்து, வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

இம்ரான் கான் சிறையில் அடைக்கப்பட்டு, அதன் காரணமாக அவரை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட விடாமல் தடுத்து, அவரது கட்சியையும் முடக்கி இந்த தேர்தல் நடத்தப்பட்டிருப்பதால் இது சமமான போட்டி கொண்ட தேர்தல் அல்ல என்ற குற்றச்சாட்டை பிடிஐ முன்வைத்துள்ளது. அதோடு, ராணுவத்தின் ஆதரவோடு நவாஸ் ஷெரீப் தேர்தலை எதிர்கொண்டதாகவும், பல இடங்களில் முறைகேடான முறையில் அக்கட்சி வெற்றி பெற்றதாகவும் பிடிஐ குற்றம் சாட்டியுள்ளது.




இந்நிலையில், இந்தத் தேர்தல் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், “இந்த தேர்தலில் சமநிலை போதுமான அளவில் இல்லை. முக்கிய பிரமுகர்கள் சிலர் போட்டியிட முடியாத நிலை இருந்தது. மேலும், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பேச்சு சுதந்திரம், இணைய சேவை ஆகியவற்றுக்கு கட்டுப்பாடுகள் இருந்துள்ளன” என விமர்சித்துள்ளது.

தேர்தல் குறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க வெளியுறவுத் துறை, “ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், பேச்சு சுதந்திரம் ஆகியவற்றுக்கு தவறான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும், பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினர் மீது தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன” என தெரிவித்துள்ளது.

இதேபோல், அமெரிக்காவின் ஜனநாயக கட்சியின் எம்பிக்களான ரோ கண்ணா, இல்தான் ஓமர் ஆகியோர், “இந்தத் தேர்தலில் ராணுவத்தின் தலையீடு இருந்தது. தேர்தல் முடிவுகளில் மோசடிகள் நிகழ்ந்துள்ளன என தெரிவித்துள்ளனர். முறைகேடுகள் மூலம் வெற்றி பெற்றதாக கூறப்படும் புகார்கள் மீது விசாரணை நடத்தப்படாத வரை வெற்றி பெற்றவர்களை அமெரிக்க வெளியுறவுத்துறை அங்கீகரிக்கக் கூடாது” என்று குறிப்பிட்டுள்ளனர்.

“பாகிஸ்தான் தேர்தல் நேர்மையான முறையில் நடைபெறவில்லை. அனைவரையும் உள்ளடக்கியதாக தேர்தல் இல்லை. இது மிகவும் கவலையை ஏற்படுத்தி உள்ளது” என இங்கிலாந்து வெளியுறவுத் துறை அமைச்சர் டேவிட் கேமரூன் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் ஷெரீப் பிலாவல் பூட்டோ இடையே உடன்பாடு

**இஸ்லாமாபாத் : பிப். 11, பாகிஸ்தானில் கூட்டணி ஆட்சி அமைக்க நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் ஒப்புக் கொண்டுள்ளன.**

பாகிஸ்தானில் கடந்த 8-ம் தேதி அந்நாட்டின் தேசிய அவைக்கும் (நாடாளுமன்றம்), மாகாண அவைகளுக்கும் (சட்டப்பேரவை) தேர்தல் நடைபெற்றது. அன்றைய தினம் காலை 8 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிக்கு நிறைவடைந்தது. இதையடுத்து, உடனடியாக வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. வாக்குச்சீட்டு மூலம் தேர்தல் நடைபெற்றதால் வாக்கு எண்ணும் பணி இன்னும் முடிவுக்கு வரவில்லை.

நேற்று நண்பகல் 12 மணி நிலவரப்படி தேசிய அவையின் மொத்தமுள்ள 266 இடங்களில், இம்ரான் கானின் ஆதரவு வேட்பாளர்கள் 91 இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம லீக் (நவாஸ்) கட்சி 71 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. முன்னாள் அதிபர் ஆசிப் அலி சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி 53 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியும் கூட்டணி ஆட்சி அமைக்க ஒப்புக்கொண்டுள்ளன.



நவாஸ் ஷெரீப்பின் அறிவுறுத்தலின் பேரில் முன்னாள் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர்கள் ஆசிப் அலி சர்தாரி, பிலாவல் பூட்டோ ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். பஞ்சாப் மாகாண தற்காலிக முதல்வர் முஷின் நக்வியின் இல்லத்தில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது. இந்த சந்திப்பின்போது, கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான நவாஸ் ஷெரீப்பின் செய்தியை ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர்களிடம் தெரிவித்ததாகவும், அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டதாகவும் செய்தி வெளியாகி உள்ளது.

மத்தியிலும், பஞ்சாபிலும் கூட்டணி ஆட்சி அமைப்பது என்றும், எந்தெந்த பதிவிகள் யார் யாருக்கு என்பது தொடர்பாக இரு கட்சிகளின் தலைவர்களும் அமர்ந்து பேசி முடிவெடுக்கலாம் என்றும் முடிவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

# மத அடிப்படையிலான சில சட்டங்களை நீக்கியது உச்ச நீதிமன்றம்

**மலேசியா : பிப். 11, கடந்த 2020ல், மலேசியாவின் வடகிழக்கில் உள்ள கெலன்டான் பகுதியிலிருந்து 2 இஸ்லாமிய பெண்கள், ஷரியத் அடிப்படையில் உருவாகியிருந்த சில சட்டங்களுக்கும், அவற்றிற்கான தண்டனைகளுக்கும் எதிராக வழக்கு தொடர்ந்திருந்தனர்.**



இவ்வழக்கில், கடந்த இரு தினங்களுக்கு முன் உச்ச நீதிமன்றம் ஷரியத் அடிப்படையில் இருந்த கிரிமினல் சட்டங்களை நீக்கி விட்டது. இது தொடர்பான விசாரணையில் 9 பேர் கொண்ட பெஞ்ச் அளித்த தீர்ப்பில், 8-1 எனும் எண்ணிக்கையில், ஷரியத் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருந்த 16 சட்டங்களை நீக்கி விட்டது.

இவற்றில் சில பாலியல் குற்றங்கள், குடும்ப உறவுகளுக்குள் நடைபெறும் பாலியல் தாக்குதல்கள், பொய் சாட்சி கூறுதல், மத வழிபாட்டு தலங்களை அவமதித்தல் உள்ளிட்ட பல குற்றங்களுக்கான சட்டங்கள் அடங்கும். மலேசியாவின் மத்திய சட்டத்தில் இவை முன்னரே அடங்கும் என்பதால், தனியாக ஷரியத் சட்டத்தின்படி இவை தேவையில்லை என தீர்ப்பாகி உள்ளது.

மலேசியாவில் இரட்டை சட்ட முறை கடைபிடிக்கப்படுகிறது. தனி நபர் மற்றும் குடும்பங்கள் சார்ந்த சிக்கல்களுக்கு ஷரியத் சட்டமும், பிற விஷயங்களுக்கு பொது சட்டமும் உள்ளது. மலேசியாவின் 33 மில்லியன் மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு பூர்வீக மலேய மக்கள். இவர்கள் இஸ்லாமியர்களாகவும், இவர்களை தவிர சீனர்களும், இந்தியர்களும் மக்கள் தொகையில் உள்ளனர்.

தனது மகளுடன் இணைந்து இவ்வழக்கை தாக்கல் செய்த நிக் எலின் நிக் அப்துல் ரஷீத் எனும் வழக்கறிஞர், “மலேசிய அரசியலமைப்பு சட்டம்தான் உயர்ந்தது என இத்தீர்ப்பில் தெளிவாகி உள்ளது” என தெரிவித்தார். 2022 பொது தேர்தலில் வென்ற பிரதமர் அன்வர் இப்ராகிம், இந்த தீர்ப்பினால் அரசியல் ரீதியாக விளையும் மாற்றங்களை சந்திப்பது சவாலாக இருக்கும் என அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்தனர்.

# அமெரிக்காவில் தமிழ் வளர்க்கும் தம்பதியர் : அடுத்தடுத்து தொடரும் திருக்குறள் சாதனைகள்

**டெக்சாஸ் : பிப். 11, அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் டல்லாஸ் நகரில் சப்தமில்லாமல் கடந்த 17 வருடங்களாக தமிழ் வளர்த்து சாதித்து வருகிறார்கள் வேலுராமன், விசாலாட்சி தம்பதியர். இந்த வருடம் இவர்களது சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் 17வது “ஒரு குறள் ஒரு டாலர்” போட்டியில் பங்கேற்ற இரண்டு மாணவ மாணவிகள் புதிய சாதனை படைத்துள்ளனர்.**

10 வயது மாணவி லயா ரச்னா ப்ரவீன் மற்றும் 13 வயது மாணவன் அர்ஜுன் ஷண்முகமணி, 1330 திருக்குறளையும் பொருளுடன் ஒப்புவித்து ‘குறள் இளவரசி’, ’குறள் இளவரசன்’ பட்டத்தை வென்றுள்ளனர். நிலை 1 பிரிவில், 6 வயது ஆதவன் செந்தில்குமார் 500 திருக்குறள்களை ஓதி முதல் பரிசு பெற்றுள்ளார்.

3 வயது பாவலன் பார்த்திபன், 65 திருக்குறள்களைக் கூறி மழலை பிரிவில் சாதனை படைத்துள்ளார். 2 வயது ஆதேஷ் மணிகண்ட நிர்மல்குமார் நிகழ்ச்சியின் மிக சிறுவயது பங்கேற்பாளராக வெற்றி பெற்றிருக்கிறார். நிலை 1 பிரிவில், 6 வயது ஆதவன் செந்தில்குமார் 500 திருக்குறள்களைக் கூறி முதல் பரிசினை வென்றுள்ளார். நிகழ்ச்சியில் நடைபெற்ற ஆத்திச்சூடி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளிலும் மாணவ மாணவிகள் ஆர்வத்துடன் பங்கேற்று பரிசுகளை வென்றனர்.

’குறளரசன்’ செந்தில்செல்வன் துரைசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பங்குபெற்ற அனைவரையும் பாராட்டிப் பேசினார். சாஸ்தா தமிழ் அறக்கட்டளை மற்றும் ப்ளேனோ தமிழ்ப்பள்ளி நிறுவனர்கள் வேலு ராமன், விசாலாட்சி வேலு தம்பதியினர் பெற்றோர்கள் உட்பட அனைவரையும் வரவேற்று உற்சாகப்படுத்தினர்.



சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் சார்பில் முன்னதாக டல்லாஸில் நடைபெற்ற திருக்குறள் போட்டிகளில். கீதா அருணாச்சலம், முனைவர். சித்ரா மகேஷ், சீதா பாலாஜி, செந்தில்செல்வன் துரைசாமி, தனிஷ் சட்டநாதன், அபிராமி இளங்கோவன், ஸ்ரீபாலாஜி ராஜமாடசாமி ஆகிய ஏழு பேர் 1330 திருக்குறளையும் கூறி குறளரசி, குறளரசன், குறள் இளவரசி, குறள் இளவரசன் பட்டங்களை வென்றுள்ளனர்.

டல்லாஸ் மட்டுமல்லாமல், அமெரிக்காவின் பிற பகுதிகளில் நடைபெறும் திருக்குறள் போட்டிகளிலும் மாணவ மாணவியர்களும், பெரியவர்களும் பங்கேற்று சாதனைகளை நிகழ்த்தி வருகின்றனர். திருக்குறள் அமெரிக்கத் தமிழர்களின், குறிப்பாக தமிழ் மொழி கற்று வரும் குழந்தைகளின் வாழ்க்கையில் ஒரு அங்கமாக மாறி விட்டதாகவே உணர முடிகிறது.

அமெரிக்காவில் டல்லாஸ் நகரில் 17 ஆண்டுகளுக்கு முன்னதாக சாஸ்தா தமிழ் அறக்கட்டளையால் தொடங்கப்பட்ட ‘ஒரு குறள் ஒரு டாலர்’ போட்டியின் வழியில் அமெரிக்கா முழுவதும் பரவலாக நடைபெற்று வரும் திருக்குறள் போட்டிகளில் இளம் தலைமுறையினர் தொடர்ந்து சாதனைகள் படைத்து வருகின்றனர். இந்தப் போட்டிகள் மூலம் தமிழ்நாடு உள்பட உலகம் முழுவதும் திருக்குறள் மீது புதிய ஆர்வமும் எழுச்சியும் ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலில் அயலகத் தமிழர் நல அமைச்சர் செஞ்சி மஸ்தான், அயலகத் தமிழர் நலவாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி ஆகியோர் இத்தகைய திருக்குறள் போட்டிகளுக்கு ஊக்கமளித்து உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் வாழ்வில் திருக்குறள் ஒரு அங்கமாக மாறுவதற்கும், நடைபெறுவதற்கும் உறுதுணையாக உரிய முயற்சிகள் எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் இயல்பாக எழுகிறது.

வரலாறு விளையாட்டு

# அபார கூட்டணி அமைத்த அஸ்மத்துல்லா – நபி போராடி தோற்ற ஆப்கானிஸ்தான்

**கொழும்பு : பிப். 11, இலங்கை அணிக்கு எதிரான முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இமாலய இலக்கை விரட்டிய ஆப்கானிஸ்தான் அணி, வெற்றிக்காக கடுமையாக போராடி தோல்வியை தழுவியது. இந்தப்போட்டியில் 6-வது விக்கெட்டுக்கு ஆப்கானிஸ்தான் அணியின் அஸ்மத்துல்லா ஓமர்சாய் மற்றும் முகமது நபி இணைந்து அபாரக் கூட்டணி அமைத்தனர்.**

ஆப்கானிஸ்தான் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளும் மூன்று போட்டிகள் கொண்டு ஒருநாள் தொடரில் தற்போது விளையாடி வருகின்றன. இந்த தொடரின் முதல் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் அணி பவுலிங் தேர்வு செய்தது. முதலில் பேட் செய்த இலங்கை அணி 50 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 381 ரன்கள் எடுத்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர் பதும் நிசாங்கா, 139 பந்துகளில் 210 ரன்கள் எடுத்தார். ஃபெர்ணான்டோ 88 ரன்கள் எடுத்திருந்தார்.



382 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை ஆப்கானிஸ்தான் அணி விரட்டியது. இருந்தும் 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 339 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது. 55 ரன்களுக்கு முதல் 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது ஆப்கானிஸ்தான். அந்த இக்கட்டான சூழலில் அஸ்மத்துல்லா ஓமர்சாய் மற்றும் முகமது நபி இணைந்து வலுவான கூட்டணி அமைத்தனர். இருவரும் இணைந்து 6-வது விக்கெட்டுக்கு 242 ரன்கள் எடுத்தனர். இது ஒருநாள் கிரிக்கெட்டில் 6-வது விக்கெட் பார்ட்னர்ஷிப்பில் எடுக்கப்பட்ட அதிகபட்ச ரன்களின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இடம் பெற்றுள்ளது.

நபி, 136 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அஸ்மத்துல்லா ஓமர்சாய், 115 பந்துகளில் 149 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். மூன்று போட்டிகள் கொண்ட இந்த ஒருநாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்று நடைபெற உள்ளது. ஆப்கானிஸ்தான் அணியின் ஆட்டத்தை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# மகளிர் புரோ ஆக்கி லீக்; வெற்றிக் கணக்கை தொடங்கிய இந்தியா

**புவனேஸ்வர் : பிப். 11, இந்த தொடரில் இந்திய அணி விளையாடிய முதல் 3 போட்டிகளிலும் தோல்வியை தழுவியிருந்தது.**

மகளிருக்கான 5-வது புரோ ஆக்கி லீக் தொடர் பல்வேறு நாடுகளில் நடத்தப்படுகிறது. இதில் இந்தியா, சீனா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஆகிய அணிகள் பங்கேற்றுள்ளன. இந்த தொடரின் சில லீக் ஆட்டங்கள் ஒடிசா மாநிலம் புவனேஸ்வரில் நடைபெற்று வருகின்றன.

இந்த தொடரில் இந்திய அணி விளையாடிய முதல் 3 ஆட்டங்களிலும் சீனா, நெதர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தோல்வியை தழுவியிருந்தது. இந்நிலையில் இந்திய அணி முதல் வெற்றியை பதிவு செய்யும் நோக்கில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அமெரிக்காவுடன் விளையாடியது. இதில் ஆரம்பம் முதலே அசத்திய இந்தியா 3-1 என்ற கோல் கணக்கில் அமெரிக்காவை வீழ்த்தி இந்த தொடரில் வெற்றிக் கணக்கை தொடங்கியுள்ளது.

# இங்கிலாந்து டெஸ்ட் தொடரின் கடைசி 3 போட்டிக்கான இந்திய அணி அறிவிப்பு – விராட் கோலி விலகல்

**மும்பை : பிப். 11, இங்கிலாந்து அணிக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கடைசி 3 போட்டியிலும் தனிப்பட்ட காரணங்களால் விராட் கோலி விலகியுள்ளதாக பிசிசிஐ தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.**




முன்னதாக முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விராட் கோலி இடம்பெறவில்லை. என்ன காரணத்துக்காக விராட் கோலி இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவில்லை என்பது தெரியவில்லை. தனிப்பட்ட காரணங்களுக்காக என்று மட்டுமே சொல்லப்பட்டு வந்தது. தென் ஆப்பிரிக்க முன்னாள் டிவில்லியர்ஸ், “கோலி - அனுஷ்கா தம்பதியினர் இரண்டாவது குழந்தையை வரவேற்க தயாராகின்றனர்” என்று தகவல் கூறினார்.

ஆனால், அந்த தகவலை அவரே பின்னாளில் மறுத்தார். இங்கிலாந்து அணிக்கு எதிரான கடைசி 3 டெஸ்ட் போட்டிளில் விராட் கோலி விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர் விலகியுள்ளதாக பிசிசிஐ தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது. அந்த அறிவிப்பில், “விராட் கோலியின் விலகல் முடிவை பிசிசிஐ முழுமையாக மதிக்கிறது மற்றும் ஆதரிக்கிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாகிய இந்த 13 வருடங்களில் ஒரு டெஸ்ட் தொடர் முழுவதும் விளையாடாமல் இருப்பது இதுவே முதல் முறை.

இதற்கிடையே, கடைசி 3 டெஸ்ட் போட்டிகளில் இருந்து இந்திய வீரர் ஸ்ரேயஸ் ஐயர் நீக்கப்பட்டுள்ளார். நடந்து முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் பெரிதாக சோபிக்காத ஸ்ரேயஸ் ஐயர் முதுகுவலி காரணமாக கடைசி 3 டெஸ்ட் போட்டிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று பிசிசிஐ அறிவித்துள்ளது. இரண்டாவது டெஸ்டில் ஓய்வில் இருந்த முகமது சிராஜ் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். அதேநேரம், பிஹாரைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் ஆகாஷ்தீப் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார். இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக இந்தியா ஏ அணியில் திறமையை வெளிப்படுத்திய ஆகாஷ் தீப் தற்போது ஸ்ரேயஸ் ஐயருக்கு பதிலாக இந்திய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றபடி, இரண்டாவது டெஸ்டில் அணியில் இடம்பிடித்திருந்த ரஜத் படிதர் மற்றும் சர்பராஸ் கான் ஆகியோர் தங்களது இடத்தை தக்கவைத்துள்ளனர். காயம் காரணமாக விசாகப்பட்டினம் டெஸ்டில் விளையாடாத கேஎல் ராகுல் மற்றும் ரவீந்திர ஜடேஜா ஆகியோர் மருத்துவர்களின் உடற்தகுதி அனுமதிக்கு ஏற்ப விளையாடுவர் என்று பிசிசிஐ தெரிவித்துள்ளது.

இந்திய அணி விவரம் : ரோஹித் சர்மா (கேப்டன்), ஜஸ்பிரித் பும்ரா, யஷஸ்வி ஜெய்ஸ்வால், ஷுப்மன் கில், ரஜத் படிதார், சர்ஃபராஸ் கான், துருவ் ஜுரெல், கேஎஸ் பாரத், ரவிச்சந்திரன் அஸ்வின், அக்சர் படேல், வாஷிங்டன் சுந்தர், குல்தீப் யாதவ், முகமது சிராஜ், முகேஷ் குமார், ஆகாஷ் தீப். இவர்கள் தவிர, ரவீந்திர ஜடேஜா, கேஎல் ராகுல்.

## “சட்டப்பிரிவு 370 ரத்துக்காக மக்கள் ஆசியுடன் பாஜகவுக்கு 370 ‘சீட்’ கிட்டும்”: அமித் ஷா






## கோவையில் 12 இடங்களில் என்ஐஏ அதிகாரிகள் சோதனை: செல்போன்கள் பறிமுதல்

## “பாரத ரத்னா விருது அறிவிப்பை சர்ச்சையாக்க வேண்டாம்”: தேவகவுடா அறிவுரை



சென்னை / புதுக்கோட்டை | 11.02.2024 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

எல். டி. சாமிக்கண்ணு பிள்ளை , இந்திய அரசியல்வாதி, வரலாற்றாளர் (பி.1865) (இ.1925)



வ. சுப்பையா , இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (பி.1911) (இ.1993)



## இன்றைய நினைவு நாள்

ஜம்னாலால் பஜாஜ் , இந்தியத் தொழிலதிபர் (பி.1884) (இ.1942)



மா. சிங்காரவேலர் , இந்திய இடதுசாரி அரசியல்வாதி (பி.1860) (இ.1946)



பக்ருதின் அலி அகமது , இந்தியாவின் 5வது குடியரசுத் தலைவர் (பி.1905) (இ.1977)



ரமேஷ் சந்திர மஜும்தார் , இந்திய வரலாற்றாளர் (பி.1888) (இ.1980)



உ. ரா. வரதராசன் , இந்திய அரசியல்வாதி, தொழிற்சங்கவாதி (பி.1945) (இ.2010)



## அறிவியலில் பெண்கள், மற்றும் சிறுமிகளுக்கான பன்னாட்டு நாள்